1085

# ஐங்கால பிரார்த்தனையான தொழுகையின் வியாக்கியானம்.

---

சர்வ சமயிகளும் இஸ்லாத்தின் வணக்கமானது இறைவனுக்குகந்ததென உணரவேண்டுமென்ற அபிலாசம் அதிகரித்தும் வாங்குவோர்களின் சௌகரியத்தை உத்தேசித்தும் அதிக லாபத்தைக் கருதாமலும் சொற்பக் கிரயமாய் புத்தகம் ஒன்றுக்கு (அணா நாலாகவும்) ஏற்படுத்தி ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றன.

இன்ஷா அல்லா இனி.

(1) ஐந்து கலிமாக்களின் அர்த்தம், அந்தரங்கம், பைரங்கம், காரணார்த்தம்.

(2) இவைபோல தொழுகை, நோன்பு, ஸக்காத்து, ஹஜ்ஜு விஷயமாயும்;

(3) ஈமானின் இரகசியம்.

இவைகளுக்கு சிறு சிறு தனிப்புத்தக ரூபமாய் வெளியிடப்படும்.

---

(ஆக்கியோன்) சுத்தசத்திய சைதன்யதீனுல் இஸ்லாம் தேசாந்தர ஊழியனும், பற்பல மத பரீக்ஷாத்தனும், ஸாதாத்துமான

பா. அமீர் சாயபு,

திருநெல்வேலி.

[Registered

1933.

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்.

# ஐங்கால பிரார்த்தனையான

# தொழுகை வியாக்கியானம்.

அரபுக்கல்வி பயிலா அவர்களும் தொழுகையின்
மகிமைகளை அறிந்து நடாத்தி நற்பயனடைவதற்காக
முஸ்லீம் பற்பல நூல்களிலிருந்து பொறுக்கி
செந்தமிழ்நடையில்

சுத்தசத்திய சைதன்னியதீனுல் இஸ்லாம் தேசாந்தர
ஊழியனும், பற்பல மதபரிக்ஷாத்தனும்,
ஸாதாத்துமான

திருநெல்வேலி

**பா. அமீர் சாயபினால்**

செய்யப்பட்டு விஷயசூசிகையில்க்கூறிய கனவான்
களின் இனம் பொருளுதவியால் அச்சிடப்பட்டது.

இதன் கிரயம் அணா 4.

வெளியூர்களுக்கு வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

ரிஜிஸ்டர்] [காப்பி ரைட்.

1933.

ஸ்ரீ முருகானந்தா பிரஸ், திருநெல்வேலி.

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்.

# ஐங்கால பிரார்த்தனையான தொழுகையின் வியாக்கியானம்.

## விஷய சூசிகை.

1. அல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன்

சர்வபுகழும் ஸமஸ்த உலகங்களையுடைய அல்லாஹுத்தஆலாவுக்கே தகுதியா யிருக்கும்.

2. வல் ஆக்கிபத்துலில் முத்தக்கீன்

இன்னும் முடிவுநாளின் நற்பெயரானது நல் வணக்கத்தினீடேற்றம் பெற்றவர்களுக்கா யிருக்கும்.

3. வஸ்ஸலாத்து—இன்னும் திருவருள்க் கருணையும்.

4. வஸ்ஸலாமு — இன்னும் ஈடேற்றமும்.

5. அலாரஸூலிஹி ஸய்யிதினா முஹம்மதின்

நாயனின் திருத்தூதரும் நமக்கெல்லாம் நாயகமாகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள்மீதும்.

6. வ—ஆலிஹி—வ—ஸஹ்பிஹி—அஜ்மயீன்

இன்னும் அவர்களின் கிளைகோத்திரத்தார்கள் தோழர்கள் மற்றும் முஸ்லிம்கள் யாவற்றினாள்மீதும் உண்டாவதாக.

நம் முஸ்லிம் சகோதரர்கள் நம்மிஸ்லா மார்க்கத் தொழுகையின் இணக்கம் வணக்கம் முதலியவைகள் அரபுப் பாஷையிலிருப்பதால் அவையை அறிந்தோர்களன்றி அறியாதார்களுக்கு அவ்விஷயங்களை அறிந்துகொள்ள நாமள் ஜனனமாய் வசிக்கும் தாய்நாடு தமிழ்ப் பாஷையிலிருந்தால் சுலபமாய் அறியலாமென்ற அவாக்கொண்டு எம்மிடம் பற்பல காலமாய்பகர்ந்து நிற்றலை பணிவுடன் யான் ஏற்று நமது முஸ்லிம் நூல்கள் அநேகத்திலிருந்து பொறுக்கித்திரட்டி அவைகளில் பெரும்பாலும் அர்த்தத்துடனும் சிற்சிலவைகளுக்கு அர்த்தங்களும், காரணார்த்தங்களுமாக வரிசைக் கிரமமாய் ஒன்றித்து ஐங்காலபிரார்த்தனையான தொழுகை வியாக்கியானமென நாமமிட்டு;

(1) காயல்நகர், ஸி. ஆ. (ஹாஜி) அப்துல்லா ஆலிம் சாயபு அவர்கள்.

(2) திருநெல்வேலிப் பேட்டை, வா. பீ. பீ. (ஹாஜி) பீருமுஹ்யித்தீன் ஆலிம் சாயபு அவர்கள்.

(3) ஷெய்யூர் (வ.கா.வ.) முஹம்மது ஆலிம் சாயபு அவர்கள்.

இம்மூவர்களால் சரிபார்க்கப்பட்டும் இவர்களில் (வ. கா. வ.) முஹம்மது ஆலிம் சாயபு அவர்களைக்கொண்டு அரபு உச்சரிப்புக்கு நிதானமா யொத்துவரக்கூடிய வடமொழித்தமிழ் அட்சரங்களை அமைத்து பிழை திருத்தங்களை தெளிவுபடவிளக்கி வெளிப்படுத்தலை.

## பேட்டை.

(1) ப. த. ஸி. வா. திவான் முஹ்யித்தீன் இராவுத்தர் அவர்கள்.

(2) த. மு. (ஹாஜி) முஹம்மது ஷம்ஸுத்தீன் இராவுத்தர் அன் பிரதர்ஸ் அவர்கள்.

(3) கா. (ஹாஜி) முஹம்மது ஷம்ஸுத்தீன் இராவுத்தர் அவர்கள்.

(4) வெ. பீ. சின்னபிச்சை முஹ்யித்தீன் இராவுத்தர் அவர்கள்.

(5) க. நா. அப்துல்காதிர் இராவுத்தர் அன் கோ, அவர்கள்.

(6) ம. மு. அப்துற்-றஹ்மான் இராவுத்தர் அவர்கள்.

## திருநெல்வேலி.

(1) வா. மு. சே. முஹம்மது முஸ்தபா இராவுத்தர் அவர்கள்.

(2) மு. அ. அமீர் சாயபு அவர்கள்.

(3) வக்கீல், **K** முஹம்மது ஹுஸைன் சாயபு அவர்கள்.

(4) டிசேசரி டிப்டி கலக்டர், **M. A.** காதிர்பாஷா சாயபு அவர்கள்.

இவ்வாயான கனவான்களின் இனாம் பொருளுதவியால் அச்சிடப்பட்டது.

இதில் இஸ்லா மார்க்கப்பற்றும் தொழுகையை விடாப்பிடியாய் நடத்திவருபவர்களில் பொருள்கொடுத்துவாங்க சக்தியற்ற ஏழை முஸ்லிம்களுக்கு அவர்கள் நிலைமையை தெளிவாய் விசாரித்து அறிந்து இப்புத்தகம் இனாமாகவும் கொடுக்கப்படும்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா நிர்றஹீம்.

# சுத்தத்தின் விபரமாவன

## ஜலஉபாதி நீக்கலும் அவையை சுத்திகரித்தலும்.

---

வெந்துருகின யாவற்றுப் பொருளன்றி நீர் உலர்த்துதலாகக் கூடிய சுத்தப் பொருளான மண், மணற், மண்ணாங்கட்டி அரை குறையாய் வெந்தசெங்கற்கட்டி இவைகளை வலக்கையில்வைத்துக் கொள்வதில், கட்டிகளாயிருந்தால் அதை மும்முறை மெதுவாய் தட்டி இடக்கையில் வைத்துக்கொண்டு,

### உபாதி நீக்கல்.

1. மூத்திரமான சிறுநீர் விடும் ஸ்தானமானது கடினமாயிருந்தால் அதைக்கொஞ்சம் மிருதுவாக்கிக் கொள்ளல்வேண்டும்.

2. தேகத்தின்மீதும் வஸ்திரங்கள்மீதும் ஷை மூத்திரமான சிறுநீர்த்துளி சிதராத மேடான இடத்திலிருந்து தாழ்ந்த விடத்தில் பெய்யவேண்டும்.

3. தாழ்ந்தவிடத்திலிருந்து உயர்ந்தவிடத்தில் பெய்யலாகா.

4. முதுகும் வயிறும் கருபாவின் எதிர்முகமாகும்படியிருக்கலாகா.

5. சூரியன், சந்திரன், காற்று இவைகளுக்கு எதிர்முகமாயிருக்கலாகா.

6. வளைகளில் விஷ ஜெந்துக்களிருக்குமாதலால் அவைகளிலும் பெய்யலாகா.

7. உட்கலம்.

(1) ஜலத்திலும்

(2) பலன் தரும் விருட்சங்களின் அடியிலும்

(3) உட்காரும் சாலைகளிலும்

(4) பயிரிட்டிருக்கும் வயற்களிலும்

(5) மஸ்ஜிது ஈத்கா ஆகியவைகளின் முன்பின் வலது இடது பக்கங்களிலும்

(6) கபுறுஸ்தான்களிலும்

(7) மிருகங்களின் மீதும்

(8) வழிப்பாட்டையிலும்

(9) உஜூச்செய்யுமிடத்திலும்

(10) நின்றுகொண்டும்

(11) படுத்துக்கொண்டும்

(12) இவ்வாரான இடங்களிலும் மூத்திரமான சிறுநீர் விடலாகா

8. நீருக்கிருந்தபின் இடக்கையால் மண்ணுங்கட்டி முதலியவைகளானதை நீர்த்தாரையின் முகத்தில் ஒத்தி நீரை வடட்ட வேண்டும் நீர் சுவறுகிறவரையில் மறைவான இடத்தில் நின்று (10) அடி முதல் (400) அடி வரை உலாத்துதலுக்குள் நீர்த்தாரையின் முகத்தில் ஈரமற்றிருந்தால் கட்டியையுடைத்து விடவேண்டும் மற்றவைகளை அப்புறப்படுத்தவும்.

9. ஆனால் சிலர்களுக்கு தொங்குநீர் ஏற்பட்டிருந்தாலவர்கள் கனைப்பதோடு ஒரு தொடையின்மீது மறுதொடை வைத்து நெருக்கவேண்டும் நீர்த்தாரையின் கீழ்அடிப்புறமுதல் முனைப்புறம் சமீபம்வரை இடக்கையின் இரண்டு விரலால் அழுத்தி யுருவி விடவேண்டும் மனதிர்ப்த்தியான பின்மண் மணற் மண்ணுங்கட்டி மேற்கூறிபசெங்கற்கட்டி இவைகளையும் அப்புறப்படுத்தலில்கட்டிகளையுடைத்து விடவேண்டும.

10. இம்முடிவுவரை பேசலாகா.

11. பெண்களுக்கு இவைகளையுபயோகிக்க உத்தரவில்லை ஆனால் நீருக்கிருந்த விடத்தைவிட்டு உட்கார்ந்தபடியே சற்று நகர்ந்து ஜலத்தால் அலம்பி சுத்திகரித்துக் கொள்ளல் வேண்டும்.

12. ஜலத்தாலிரண்டு முன்னங்கைமொழிவரை மும்முறை தேய்த்து அலம்பி சுத்திகரித்தல் கொண்டபின் நீர்த்தாரையை அவ்வாறு மும்முறைக்குக் குறையாமல் ஜலத்தால் சுத்திகரிப்பது ஆண் பெண் இருவகையாருக்கும் சரியே.

இதில் வெளிக்கலை(12)-ம் உள்க்கலை(12)-ம் ஆக வகை இரண்டிலும் இருபத்திநான்கின் விபரமுணர்க.

## மலஉபாதி நிவாரணமும் அவையை சுத்திகரித்தலும்.

1. மண்கட்டி அரைகுரையாய் வெந்த செங்கற்கட்டி கல் இவைகளான (3) (5) (7) கட்டிகளை ஒற்றைபடஎடுத்து மூன்று முறைமெதுவாய்த்தட்டி வைத்துக்கொண்டு,

2. கூடுமானல் தொழுகையின்வஸ்திரங்களை களைந்துவைத்துவிட்டு வேறுவஸ்திரங்களை அணிந்துகொள்ளலாம்.

3. முதலாவது மேலங்கியின் இடக்கையை வலக்கையாலும் வலக்கையை இடக்கையாலும் உயர்த்தி ஏற்றிக்கொள்ளல் வேண்டும்.

4. சிரம் முதுகு இவைகள்திறந்திருக்கலாகா.

5. நாயனுடையநாமம் நமதுநபி அவர்களின்நாமம் குர்ஆன் ஆயத்தான வசனங்களெழுதியிருக்கின்ற மோதிரங்களை தரித்துக் கொள்ளாது அப்புறப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

6. இவைபோல கடிதங்களிலெழுதி யிருப்பதற்கும் அவ்வாறே.

7. மலஉபாதி நீக்கலிடத்திற்கு இடப்பாதத்தை ஆரம்பமாய் வைத்துப்போக வேண்டும்.

8. ஷை உபாதிகழித்தலில் முகம் முதுகு இவைகள் கருபா பார்வையிருக்கலாகா.

9. இடக்கையை மோவாய்க் கட்டைக்கு கீழ்வைத்துப் பாரம் இடக்காலின் மீதிருக்கவேண்டும்.

10. இவையால் மலம் நன்றாய் வெளிப்படும்.

11. தன்னை அதிக நிர்வாணமாக்கலாகா.

12. தன்னுடைய மர்மஸ்தானத்தை அனாவசியமாய் பார்க்கலாகா.

13. இக்கழித்தலில் பேசலாகா.

14. பாங்கு— சலாம்— தும்மல்— ஆகியவைகளின் ஜவாபு சொல்லலாகா.

15. தான் தும்மினால் அல்ஹம்துலில்லாஹி யென்று சொல்லலாகா.

16. ஜவாபு சொல்லலாகாவென்ற (14)(15) லக்கவிஷயமுள்ளவைகளுக்கு ஜவாபுமனதில் நினைத்துக்கொள்ளலாம் அவைகுற்றமாகா.

17. பூமி— சுவர்— இவைகளிற் கோடுகீறலாகா.

18. பல்விளக்கலும் ஒக்காளமும் செய்யலாகா.

19. இயாதொன்றையும் புசிக்க பருகலாகா.

20. மூக்கைச்சிந்தலும் துப்பலுமாகா.

21. மலத்தையும் வானத்தையும் பார்க்கலாகா.

22. அதிகநேரம் உட்கார்ந்திருக்கலாகா.

## மலத்தைசுத்திகரிக்கும் வகையாவன.

1. உஷ்ணகாலங்களிற் பீசம்தொங்குதல்கொண்டிருப்பதாலும்,மழை குழிர் முதலியகாலங்களிற் பீசம் மேலுக்கேறி சுருங்கியிருப்பவையாலும் அவையில் அசுத்தம்படாதிருக்கும் பொருட்டாய் உஷ்ணகாலங்களிற் கட்டிகளை முன்பக்கமிருந்து பின்பக்கம் கொண்டுபோயும் மழை குழிர் முதலியகாலங்களிற் கட்டிகளைபின் பக்கமிருந்து முன்பக்கம் கொண்டுபோயும் சுத்திகரிக்கவேண்டும்.

2. பெண்களின் மர்மஸ்தானம் மலஸ்தானம் ஆகிய இரண்டும் சமீபத்திருக்கின்றமையால் அவைகளிற் மலம் படாதிருப்பதற்காக அவர்கள் எப்பொழுதும் முன்பக்கமிருந்து பின்பக்கம் கொண்டுபோய் சுத்திகரிக்கவேண்டும்.

3. ஆண் பெண் இருவகையாரும் கடைசியானகட்டியில் ஈரப்பசையில்லாதவரை சுத்திகரித்து சிறுநீரையும் சுவரச்செய்த பின் இரண்டு கைகளையும் மணிக்கட்டுவரை ஜலத்தால்தேய்த்து அலம்பல்கொண்டதற்கப்பால் அந்தமர்மஸ்தானங்களையும் ஜலத்தால் சுத்திகரிக்கவும்.

## ஜலத்தால் சுத்திகரிக்கும்விதமாவன.

1. ஆரம்பத்தில் இடக்கையின் நடுவிரலாலும் அப்பால் அதற்கடுத்தவிரலைச்சேர்த்தும் மூன்றுவதாக சின்னவிரலையும் இவ்வாறுகிரமமாய்த் தேய்த்து சுத்திகரிப்பதில் விரற்களின் நுனியால் தேய்த்து சுத்திகரிக்கலாகா. அவை எதற்காக தடுக்கப்பட்டதானால் நகத்திற்குள் மலம் சேர நேருமெனக்கொள்ள.

2. அலம்பிவிழுகின்ற ஜலமானது முன்போலவிகற்பமின்றி சுத்த ஜலமாயும் மன திருப்தியாயும் தோற்றும்வரை சுத்திகரிக்க வேண்டும்.

3. மர்மஸ்தானங்களை அலம்பியசுத்தத்தை வேறுவஸ்திரத்தால் துடைக்கவேண்டும்.

ஏனெனிற் இம்மர்மஸ்தானத்தை துடைத்தவஸ்திரத்தால் உடலின் உருப்புகளை துடைத்தல் மக்ராஹ் அதாவது அருவருப்புஎன்பதே.

4. ஜலத்தைக்கொண்டு சுத்திகரித்தலான பின் அப்பால் கடைசியாக இருகைமணிக்கட்டுவரைமும்முறைதேய்த்து அலம்பி வெளியாகவேண்டும் (ஆகமூன்று வகையிலும் (29) கலத்தின்விபர முணர்க.

## முழுகல்.

சொந்தஸ்திரிபுருஷாள் இருவர்களின் சங்கமமென்றபுணர்தல் விஷயத்தைப்பற்றியது.

1. புசித்தல் பருகல் முடிந்து நான்குமணித்தேசகாலத்தின் பின் உளுவுடன் ஆரம்பித்து போகித்தபின்னும் பிரியம் ஏற்படில் ஒவ்வொரு முறைக்கும் ஜலத்தால் மர்மஸ்தலங்களை சுத்திகரித்துக் கொண்டும் உளுவும்செய்துகொள்ளவேண்டும்.

## இவர்கள் முழுகும் விஷயங்களின் கூட்டுத்தொகுதி.

1. ஸ்நானஞ்செய்வதற்கு முன் மலஜல சுத்திகரித்தல் கொண்டு தேகத்திலுள்ள அசுத்தங்களை நீக்கலோடு சுத்தமான வஸ்திரம் அணிந்து உளுச்செய்து,

2. (அப்பால்) அக்தவிஹுவிரபஇல்ஹகதி

(அர்த்தம்) அசுத்தத்தினின்றும் நீங்கிச் சுத்தியாவதற்காய் ஸ்நாநம்செய்கிறேனென நிய்யத்துச்செய்துகொள்ளலோடு ஷஹாதத்கலிமாவுஞ் சொல்லிக்கொள்ளல்வேண்டும்.

3. தேகமுழுவதையும் பின்காணும்பிரகாரம் ஜலத்தை ஊற்றி கழுவல் கொள்ளவேண்டும்.

4. அவை எவ்வாறெனிற்,

5. வலத்தோளின்மீதும் மும்முறையும் இடத்தோளின்மீதும் மும்முறையும் சிரசின்மீதும் மும்முறையும் இவ்வாராகச் செய்தபின்,

## மஸ்அலா வியாக்கியானம்.

1. ஜலத்தால் வாய் கொப்புளித்தல்.

2. ஜலத்தை நாசியில் செலுத்திச் சிந்துதல்.

3. தேகமுழுவதும் ஒருமுறை ஜலத்தைச் சொரிதல்.

4. தேகத்தில் மயிர்ப் பிரமாணம் நனையாதிருந்தாலும் முழுக்கு நிறைவேறாது.

5. ஆனல் எவ்வளவு நனையாதிருக்கின்றதோ அப்பாகத்தை ஜலத்தால் கழுவுதல் கொள்ளவும்.

6. தூங்கி எழுந்தபின் தேகத்தின்மீது அல்லது வஸ்திரத்தில் (சொர்ப்பன ஸ்கலித) ஈரங்காணப்பட்டாலும் அவை ஞாபகமில்லையாயினும் ஸ்நானம் செய்யவேண்டியது.

7. ஆனல் அவையில் நடபடிக்கை ஞாபகமிருந்தும் இந்திரிய ஸ்கலிதமாகாதிருந்தால் ஸ்நானம் செய்யவேண்டியது அவசியமில்லை.

8. ஏனெனிற் அவை ஒரு நிமிஷ நேரமிருந்து நின்றுவிடுவதாலெனக்கொள்ள,

9. கைச்சரச முதலிய காம விளையாட்டில் ஆசையுடன் இந்திரியம் குதித்து வெளிப்பட்டாலும் சங்கமமென்ற புணர்தலில் இந்திரியம் ஸ்கலிதமாகாவிட்டாலும்,

10. ஸ்நானஞ்செய்யாத (7) 8 லக்கம் நீங்கலாக மற்றவை களுக்கெல்லாம் ஸ்நானம் செய்யவேண்டியது பர்லான கடமையே.

## இவர்களுக்கு விலக்கல்.

1. குர்ஆன்ஷரீ பின் ஒரு ஆயத்தை அதாவது ஒரு வசனத்தை உறையில்லாமற் தொடல்.

2. அவையை ஓதல்.

3. மஸ்ஜிதில்ப் போதல்.

4. அவையிலும் மற்ற விடங்களிலும் தொழல்.

5. நோன்பு வைத்தல்.

6. கஃபாவின் தவாபு செய்பல் இவைகளே.

இவைகள் நான்கு வகையிலும் (22) கலத்தையு முணர்க.

---

## ஸ்திரிகளின் தனி விஷயம்.

முன் கூறிய ஆடவர்விதமாய் நடத்தலோடு பின் நடத்த லாவன.

1. தங்கள் தங்கள் சிரஉரோமம் பின்னல் அழுத்தமாய்ப் பின்னப்பட்டு அவிழ்த்துவிடக்கூடாமையா யிருந்தால் அவையின் அடியிற் ஜலத்தைச் செலுத்தவேண்டியது; மற்ற உரோமம் நனையாதிருந்தாலும் குற்றமாகா.

2. மாதாந்த தீட்டின் குறைந்த காலப்பிரமாணம் (மூன்று) நாட்களே அதிகம் (பத்து) நாட்களென்பது பிரசித்தமே.

3. இதில் வெண்மை நிறமுள்ள ஜலத்தைத்தவிர மற்றெவ் வித வர்ணமுள்ள இரத்தம் சிரவித்தாலும் ஹய்ல் சூதகமேயாம்.

4. நிபாஸென்னும் பிள்ளைப்பேறு துடக்கின் குறைந்த காலப் பிரமாணத்திற்குத் திட்டமில்லை ஆனல் அதிகம் (நாற்பது நாட்களே.)

5. மாதாந்த தீட்டிலும் நிபாஸென்னும் பிள்ளைப்பேறு துடக்கின் காலத்திலும்,

(1) சங்கமமென்றபுணர்தல்.

(2) குர்ஆன்ஷரீபின் ஒரு ஆயத்தை அதாவது ஒரு வசனத்தையாவது உறையில்லாமல் தொடல்.

(3) அவையை ஓதல்.

(4) மஸ்ஜிதில் போதல்.

(5) தொழல்.

(6) நோன்பு வைத்தல்.

(7) கஃபாவின் தவாபு செய்யல்.

இவைகள் ஹறாமென தடுக்கப்பட்டிருக்கின்றன.

6. றம்லான் மாதத்தில் மாதாந்த திட்டிலும் நிபாஸூத் திட்டிலும் றம்லானுக்குப் பிறகு (பதினொரு) மாதங்களுக்குள் இலகுவாய் கலாச்செய்யக்கூடும். இதற்கு வேற்றுமையாய் மாதாந்த திட்டிற்குப் பின் வருகின்ற நாட்களிலும் தொழுகை பர்லா யிருப்பதால் கலாச்செய்வது கஷ்டமாகும். ஆகையால் விடுபட்ட தொழுகை மன்னிக்கப்பட்டிருக்கின்றன.

---

## ஆண், பெண் அணிதல் உடைகளிற் கனத்த நஜீஸு அதாவது திக்கான அசுத்தங்கள் பட்டிருப்பதை சுத்திகரித்தல்.

1. ஆண், பெண் இருவகையாரின் மலஜலம்.

2. ஹறாமான கடையினத்தின் மலஜலம்.

3. ஹலாலான பறவை இனங்களின் மலம்.

4. ஓட்டமுள்ள இரத்தமும் சாராயமும்.

5. இவைகள் அணிதல் உடைகளிற் ஓர் திரமென்ற இந்தியா வெள்ளி கால்ரூபாய் விருத்தவட்டமுள்ளதற்கு அதிகமாய்ப் பட்டிருப்பதை சுத்திகரிப்பது (பர்லு)

6. இதற்கு சரியாத்திருப்பதை சுத்திகரித்தல். (வாஜிபு)

7. இதற்கு குறைபடலை சுத்திகரிப்பது (சுன்னத்து.)

8. இவைகளை துப்புரவு செய்யலாவது,

(1) ஜலம்,

(2) பன்னீர்.

(3) காடி.

இவைகளைப் போன்றவைகளாற் கழுவி வருணம் வாசனை நீங்கும் வரையிற் சுத்திசெய்யவேண்டியது. அவ்வாறு நீக்கக் கூடாமையாயிருந்தால் நஜிஸை மாத்திரம் நீக்கிவிட வேண்டும். சவுக்காரம் முதலியவைகளாற் கழுவவேண்டிய அவசியமில்லை.

## இலேசான நஜிசாவது.

1. ஹலாலான நடையினத்தினும் குதிரையினும் மூத்திர ஜலம்.

2. ஹறாமான பறவை இனங்களின் மலமும்.

3. இந்த நஜிஸின் திடமென்னும் பிரமாணமென்பது உள்ளங்கைப் பள்ளத்தின் பிரமாணமாம்.

4. இது ஒன்றில் சரியாய் அதன் காற்பாகத்தளவுபட்டால் அதனைச் சுத்திசெய்வது (பர்ழு)

5. அவ்வாறில்லாவிட்டால் அதனைச் சுத்திசெய்வது (சுன்னத்து)

## நீர்த்துவமான நஜிஸு.

1. மிருதுவான வஸ்துவிற்பட்டால் மூன்று தடவைகள் கழுவிக் கழுவி பிழிந்து பிழிந்துவிடவும்.

2. கடினமான வஸ்துவிற்பட்டால் மூன்று தடவைகள் கழுவிக் கழுவி யுலர்த்தி யுலர்த்திக் கொள்ளவேண்டும்.

3. உலர்த்தலாவது ஒரு தடவை கழுவி ஜலம் சொட்டுகிறது நிற்கிறவரையில் தாமதித்திருப்பதேயாம்.

ஆக ஆறு வகையிலும் (32) கலத்தையுமுணர்க.

---

## உலூ.

உலுவென்பது அனுஷ்டானம்.

தொழுகைக்கான உலுவாகின்றதற்கு நித்திய கருமஅனுஷ்டானமெனக் கொள்ளுக.

## உலுவுக்குரிய ஜலம்களின் விபரமாவன.

ஆறு, குளம், வாய்க்கால் ஓடை இவைகளிற் கடாசியாய் வைக்கோல் துரும்பு அசைவாடியோடும் ஜலம் வரையும்

## ஹவ்லு

(24) அங்குல (10) கஜத்தால் நீட்டமும் அவ்வாறு அகலமும் ஜலத்தை கரத்தால் அள்ளினால் அடிமட்டம் கையில்ப்படாதிருக்கும் நிலைமையில் ஆழமுள்ள கிடங்காயிருப்பவையே

## கிணறு

(24) அங்குல (36) கஜத்தால் சுற்றழவுள்ளதே.

## நஜிஸா விபரமாவன.

ஓடுகின்ற ஜலத்திலும் ஹவ்லு ஜலத்திலும் நஜீஸா விழுந்தால் நஜீசாகா ஆனால் ஜலத்தின் தன்மைமாற்றமாய் நிறம் சுவை வாசனை ஏற்பட்டிருந்தால் அசுத்தமாய்விடும் அவை உலுவுக்கும் குஸ்லுக்கும் பொருத்தமற்றதால் பருகவுங் கூடாமையே.

## கிணற்றில் நஜிஸாக்காக.

பட்டணம்படி (3) கொண்ட அளவுள்ள ஒண்ணரை மரக்கால் ஜலமானது ஒரு டோல்.

இவையை எலிக்குஞ்சிலிருந்து புறாக்குஞ்சுப் பிரமாணம் வரையிலுள்ள ஜெந்துக்கள் விழுந்து மரணமாய் விட்டால் அவைகள் ஊதி விரிந்து போகாதிருந்தால் (30) டோல் ஜலமிறைத்து விடவேண்டும்.

புறாவிலிருந்து மேல் ஆட்டுக்குட்டி பிரமாணம் வரையுள்ளதற்கு (60) டோல் ஜலமிறைத்து விடவேண்டும்.

ஆடு முதல் அதற்கு அதிகப் பருப்பமுள்ள எவ்வகை ஜெந்துக்கள் மரணமாய்விட்டாலும் அல்லது மேற்கூறப்பட்ட எலிக்குஞ்சிலிருந்து எவ்வகை பெரிய ஜெந்துக்கள் மரணமாய் ஊதி வெடித்து விரிந்து விட்டாலும் கிணற்றின் ஜலம் முற்றுமிறைத்து விடவேண்டும்.

அவ்வாறு கிணற்றின் ஜலத்தை முற்றுமிறைத்து விட சாத்தியப்படாதிருந்தால் அக்கிணற்றின் ஜலத்தை கோலினுல் ஆழத்தின் அளவுப் பிரமாணத்தை தீர்மானித்துக்கொண்டு ஒரு மணித்தியாலம் இறைத்து வற்றின ஜலம் எவ்வளவு அளவு ஏற்படுகின்றதோ அதைக்கணக்கிட்டு துடர் பிடியாய் இத்தனை மணியென்று குறிப்பிட்டு இறைத்து விட வேண்டும்.

இவைகளிறின்னும் அநேகம் நுட்பங்களிருப்பதால் அவசியப்பட்டதை மட்டும் இதிலெழுதியிருக்கின்றன மற்றவையை விரிவு நூல்களைக்கொண்டு அறியவும் அல்லாது கனம் உலமாக்களிடம் தெரிந்து கொள்ளவும்.

## பாத்திரத்தில் ஜலம் வார்த்து உலுச்செய்பவை

உலுவுக்குத் தகுதியான இரண்டு பாத்திரத்தில் ஒன்று பெரிதில் ஜலம் வார்த்து வலப்புறம் வைத்துக்கொண்டு அவைபிலிருந்து மற்றொன்றான சிறிதில் கொஞ்சமாய் ஜலத்தைச் சோர்த்து இடப்புறமாய் வைத்து சிருகச்சிருக குறைந்த பக்ஷம் உருப்புகளிற் (7) சொட்டு ஜலத்திற்கு குறையாமல் கீழ்விழக்கூடியதாய் உலுச் செய்யவேண்டும்.

## உலுச்செய்யும் முறையாவன

மேலங்கியின் வலக்கரத்தை முன்னதாயும் இடக்கரத்தை பின்னதாயும் முழங்கை மொழிக்கு மேல் உயர்த்தி அவைகள் கீழ் நோக்காதிருக்கச் செய்துகொண்டு உட்காரும்போது மற்றதிசைகளைவிட மேற்கு முகமாய் சுத்தமானயிடத்திற்குந்தி சிரம்திறந்து இருந்து கொண்டு

* (நிய்யத்து) அறிக்கையிடல்—பிரதிக்கினை,

1. அத்தவல்லஉ லிரபஇல் ஹததி

அசுத்தத்திற்நின்றும்சுத்தியாவதற்காய்உலுச்செய்கின்றேனென நிய்யத்துச் செய்யவேண்டும்.

2. அஊதுபில்லாஹி மினஷ்ஷைத்தானிர்றஜீம்

எடுத்தெரியப்பட்ட ஷைத்தானுடைய தீங்கை விட்டும் நாய

னிடம் காவல் தேடுகின்றேன்

3. பிஸ்மில்லா ஹிர்றஹ்மா நிர்றஹீம்

அல்லாஹுதஆலாவின் திருநாமோதயத்தினால் ஆரம்பிக்கின்றேன் அவன் மகா கிருபையுள்ளவன் மிக தயாளன் இகத்தில் ஜீவித்திருக்கும் காபீர் இஸ்லாமியர் யாவர்களுக்கும் கிருபை செய்கிறவன் பரத்தில் முஃமினான விசுவாசர்கட்கு குற்றங்களை மன்னித்து ரட்சிப்பவன் இவைகளை மொழிந்தபின் ஒவ்வொரு உறுப்புகளிலும் ஜலத்தைக்கொண்டு மும்முறை சுத்திகரிப்பதில் சிரம்மஸகு மட்டும் ஒருமுறை

4. இருகரத்தின் விரலிலிருந்து மணிக்கட்டுவரை முழுதும் விரலிடையுள்பட மூன்று முறை தேய்த்து சுத்திசெய்யும் போது ஒவ்வொரு முறையும்

பிஸ்மில்லாஹில் அலீம்

வல்ஹம்துலில்லாஹி அலாதீனில் இஸ்லாம்

வல்லபமுள்ள அல்லாஹுவின் திருநாமத்தால் ஆரம்பிக்கின்றேன் இஸ்லாமாகியதீனில்சர்வபுகழும் அல்லாஹுஸுப்ஹானஹுதஆலாவுக்கே தகும்.

5. வாயின் பல் நாவு முதலியவைகளை சுத்திகரித்து

6. நாசி இரண்டையுங் குடைந்து சிந்தியும்,

7. முகத்தை நெற்றி உரோமத்தின் அருகிலிருந்து நாடி அடிவரை நீட்டத்திலும் அவ்வாறு அகலத்திலும் தேய்த்துக் கழுவியும்,

8. இரண்டு கரத்தின் முழங்கை மொழியுள்பட வலப்புரக் கரத்திலிருந்து ஆரம்பித்து தேய்த்து மும்முறை அலம்பி முடித்தபின் இடப்புரக்கரத்தையும் தேய்த்து மும்முறை அலம்பி முடித்து

9. சிரசில் இரு கைவிரல்களின் பெருவிரல் நீங்கலாக மற்ற விரலெட்டால் ஒரே முறை சிரசின் பூராவாக நெற்றி உரோமத்தின் அருகிலிருந்து பிடரிவரையும்,

10. அல்லது சிரசில் நாலில் ஒரு பாகத்திற்கு குறையாது

மஸகு செய்வதில்,

**11.** அந்த ஜலத்துடனே இரண்டு சுட்டு விரற்களால் இரண்டு செவியிற்குள்ளும் இரண்டு பெருவிரற்களால் இரண்டு செவியின் பின்னும் இரண்டு பிரங்கைவிரலில் பெருவிரலன்றி மற்ற விரலெட்டாலும் பிடரியிலிருந்து கழுத்துவரை மஸகு செய்து முடித்து,

**12.** இருபாதத்தை கணுக்காலுள்பட மேல்புரம் உள்ப்புரம் விரலிடையுள்பட மும்முறை பூராத்தேய்த்து அலம்பி முடிக்கவும்

**13.** உலுவுக்காக பூரா ஓதுதல் ஷஹாதத்தென்ற சாட்சிக் கலிமாவே அத்துடன் நாயனுடைய திருவருள்க்கருணையென்ற சலவாத்தைச்சேர்த்து ஓதல் மேற்கொண்ட நன்மைபயத்தலே

## ஷஹாதத்க்கலிமா

**14.** அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரிகலஹு

நிட்சயமாய் வணக்கத்திற்கு பாத்திரவான் யாருமில்லை அல்லாஹுத்தஆலாவைத்தவிர அவன் தனித்தவன் அவனுக்கு இணை ஒருவருமில்லையெனச் சொல்லுகின்றேன்

வஅஷ்ஹது அன்னமுஹம்மதன் அப்துஹு வரஸுலுஹு இன்னும் நிட்சயமும் உண்மையுமாக முஹம்மதுநபிசல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் அல்லாஹுவின் பிரியமான அடியாரும் அவனால்அனுப்பப்பட்ட திருத்தூதருமென உறுதிகூறுகின்றேன்

## சலவாத்தென்றதரூது

**15.** அல்லாஹும்ம ஸல்லிஅலா-ஸய்யிதினா-முஹம்மதின் வஅலாஆலிமுஹம்மதின் வபாரிக்-வஸல்லிம்

நாயனேஎங்கள் நாயகர் முஹம்மதுநபி-சல்லல்லாஹு அலைஹி வசல்லமவர்கள்மீதும் அவர்களுடைய கிளைகோத்திரத்தார் மீதும் தரூதை அனுப்புபரக்கத்தைக்கொடு மேலும் சலாமத்தாகவை

---

மஸகு துடைத்தல்
தரூது — கிருபை அனுப்பவேண்டல்.
பரக்கத்து — நயவிருத்தி.
சலாமத் — சேமம்.

## தய்யம்மமுசெய்யும் முறையாவன.

1. உலுச்செய்யும் முறையில்க் கூறியிருக்கின்ற பிரகாரம் மேலங்கியின் வலக்கரத்தை முன்னதாயும் இடக்காத்தை பின்னதாயும்முழங்கை மொழிக்குமேல் உயர்த்தி அவைகள் கீழ்நோக்கா திருக்க செய்துகொண்டு

உட்காரும்போது மற்ற திசைகளைவிட மேற்கு முகமாய் சுத்தமான மண்ணுள்ள இடமாய்ப்பார்த்து குந்தி இருந்துகொண்டு,

2. அத்தய்யம்மமுலிரபஇல்ஹததி

(அர்த்தம்) அசுத்தத்தினின்று நீங்குவதற்காய் தய்யம்மமு செய்கின்றேன் எனக்கூறி நிய்யத்து செய்து

3. (1) அவூது—

(2) பிஸ்மி—–

(3) பிஸ்மில்லாஹில்அலீய்

இம்மூன்றையும் பூராவாய் உலு விபரத்தில் உரைத்திருக்கிற பிரகாரம் கூறியும் அதன் அர்த்தங்களையும் அவையில் மொழிந்திருக்கின்ற பிரகாரம் தெரிந்து கொள்ளவும்

## செய்முறை

4. கைவிரற்கள் சற்று திறந்தவிதமாய் மண்மீது அறைந்து முன்னும் பின்னுமிழுத்து இருபஞ்சாக்கரத்தையும் பின்புறமாய்த் தட்டிமுகம் முழுவதையும் தடவுதல் கொண்டும்

5. அப்பால் ஒருமுறை முன்போல மண்மீது அடித்து இருபஞ்சாக்கரத்தையுமெடுத்து முதலாவது வலது காத்தின்மீது முழங்கையுள்பட கீழ்க்காணும் விபரமாய் ஓர் உரோமத்தளவு இடம் விட்டுப் போகாமலும் தடவிக்கொள்ளல் எவ்வாறெனிற் இடக்கரத்தின் நான்குவிரற்களையும் வலக்கரத்தின் பின்புரம் தடவுதல் கொள்வதோடு அப்பாலும் அவ்விடக்கரத்தின் உள்ளங்கையை வலக்கரத்தின் மறுபுறத்தின்மீது தடவுதல்கொண்டும் பின்னும் அவ்விடக்கரத்தின் பெருவிரலை வலக்காத்தின் பெருவிரல் மீது தடவுதல் கொள்ளவும் இவ்வாறே வலக்கரத்தால் இடக்காத்திற்கு செய்து முடிக்கவும்

## அதானென்றபாங்கு

மேற்குப்புறமாய் முகம் கஹ்பாவைநோக்கி நின்று ஆரம்பித்தலாவது

### ஷீயம்கலிமாதம்ஜீது

அவை அர்த்தமாவன,

மூன்றுவது அட்சரம் நாயனின்சிறப்பு

அவையைக் கூறலாவது

1. சுபுஹானல்லாஹி

அல்லாஹுத்தஆலா துய்தானவன்

2. வல்ஹம்துலில்லாஹி

சர்வபுகழும் புகழ்ச்சியும் அல்லாவுக்கு உரித்தானதே

3. வலாயிலாஹ இல்லல்லாஹு

வணக்கத்திற்கு பாத்திரமாகிய நாயன் அல்லாஹுத் தஆலாவைத்தவிர வேறு நாயனில்லை

4. வல்லாஹு அக்குபர்

அல்லாஹுத்தஆலா மிகவும் பெரியவன்

5. வலூஹவ்ல

பாவத்தைவிட்டு நீங்கவும்

6. வலாகுவ்வத்த

நன்மையைச்செய்ய பெலனும்

7. இல்லாபில்லாகில் அலீயில்அலீம்

மகாமேலான வல்லபமுடைய அல்லாஹுத்தஆலாவின் உதவிகொண்டேயொழிய வேறில்லை.

இவைகளை மொழிந்தபின்,

இரு காதின் ஆள்க்காட்டி விரற்களை இருசெவியினுள்ப் புகுத்திக்கொண்டு அவரவர் சக்திக்குத் தக்கவராய் உரத்த சத்தமிட்டு வருமாறுகளை கூவவேண்டும்.

1. அல்லாஹு அக்குபர், நான்குமுறை நேர்நின்றுகூவலில் அர்த்தம். அல்லா மிகப்பெரியவன்.

மற்றவர்கள். (பொறுதி) அல்லாஹு அக்குபர்—மர்ஹபன்—பில்க்காயிலீன — அதுலன்—வமர்ஹபன். பிஸ்ஸலாத்தி அஹ்லன்

வியாக்கியானம். நாயனுடைய வணக்கத்தைப்பற்றிச் சொல்லுபவருக்கு சமத்துவ கிரமப்படியும் தொழுகையுடைய ஒழுங்கின் கிரமப்படியும் விரிவெய்துக.

2. அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹ், இவ்வாறே இருமுறை நேர்நின்று கூவலிலும் அவ்வாறே மற்றவர்கள் இருமுறையும் வாயினுள்ச் சொல்லிக்கொள்ள வேண்டும்.

அர்த்தம். நிட்சயமாய் வணக்கத்திற்குரியநாயன் அல்லாஹுத்த ஆலாவைத் தவிர வேறொருவருமல்லவென நான் உறுதியாய் மொழிகின்றேன்; (இதற்கு பொறுதி கிடையா.)

3. அஷ்ஹது அன்னமுஹம்மதர் றஸூலுல்லாஹ், இவ்வாறே இருமுறை நேர்நின்று கூவலிலும் அவ்வாறே மற்றவர்கள் இருமுறையும் வாயினுள்ச் சொல்லிக்கொள்ளவேண்டு.

அர்த்தம். நிட்சயமாய் முஹம்மதுறசூலுல்லாஹி சல்லல்லாஹு அலைஹி வசல்லமவர்கள் அந்த அல்லாஹுவின் திருத்தூதவென நான் உறுதி கூறுகின்றேன். (இதற்கு பொறுதி கிடையா.)

4. ஹய்ய அலஸ்ஸலாத்தென்று கூவி இருமுறை வலப்புயம் திரும்பல்.

அர்த்தம். தொழுகைக்காக வாருங்கள்.

மற்றவர்கள். (பொறுதி) லாஹவ்ல — வலாகுவ்வத்த—இல்லா பில்லாஹில்—அலிய்யில் அலீம்.

வியாக்கியானம். உன்னதமானவனும் மகிமை தங்கினவனுமான நாயனுடைய உதவியினாலே யொழிய ஒரு மாறுதலுமில்லை ஒரு பலமுமில்லை, அதாவது பாவத்திநின்று நீங்குவதாகிய மாறுதலும் எல்லாவித பலமும், வல்லநாயகனனஅல்லாஹுத்த ஆலாவின் உதவியினாலே யுண்டாமென்பதாம்.

---

கூவல்—அழைத்தல். (பொறுதி) தணிவு—மன்னிப்பு.

5. ஹய்ய அலல்பலாஹ் என்றுகூவி இருமுறை இடப்புயம் திரும்பல்.

அர்த்தம். நன்மையைப் பெற்றுக்கொள்ள வாருங்கள்.

மற்றவர்கள். (பொறுதி) மாஷா அல்லாஹு—கான—வமாலம் யஷா — லம்யகுன்.

வியாக்கியானம் —அல்லா நாடினது ஆம் அவன் நாடாதது ஆகாது

6. அஸ்ஸலாத்துகைறுன் மினன்னௌம் என்று நேர் இருமுறை கூவல் இவையை பஜ்று காலம் தவிர மற்றகாலங்களிற் கூவலாகா.

அர்த்தம். தொழுகையானது தூக்கத்தைப் பார்க்கிலும் அதிமே லானது.

மற்றவர்கள். (பொறுதி) ஸதக்த்த—வபரிர்த்த —வநதக்த்த— பில்கைரி.

வியாக்கியானம். நீ உண்மை சொன்னாய் உன் பொறுப்பில் நின்றும் நீ சுத்தமானாய் நல்வார்த்தையை மொழிந்தாய்.

7. அல்லாஹு அக்குபர் நேர் இருமுறை கூவல்.

அர்த்தம். அல்லாஹு மிகப் பெரியவன்.

மற்றவர்கள். அவ்வாரே இருமுறையும் வாயினுள் சொல்லிக் கொள்ளவும்.

8. லாயிலாஹ இல்லல்லாஹ். நேர் ஒருமுறை கூவல்.

அர்த்தம். வணக்கத்திற்குறிய நாயன் அல்லாஹுத்த ஆலாவைத் தவிர வேறொரு நாயனுமல்ல.

மற்றவர்கள். அவ்வாரே ஒரு முறையும் வாயினுள்ச் சொல்லிக் கொள்ளவும்.

## பாங்கு விஷயத்தில் அறியவேண்டியவைகள்.

1. பாங்குக்கு பொறுதி சொல்லாதாரின் உயிர் நீக்கலான (சக்கராத்தில்) கலிமாஷஹாதத்துக்கூற நாவு தடுமாற்றம் ஏற்படு மென்று நமது நாயகம் முஹம்மது முஸ்தபாஸல் ஸல்லல்லா ஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

பாங்குக்கு பொருதி சொல்லு மிடமாவன.

2. இருப்பவர் — நடப்பவர்—பாங்குசத்தம் கேட்டவுடன் அவ்விடம் தாமதித்து வாயிக்குள் சொல்லிக்கொள்ளவேண்டும்.

பாங்கு சொல்லவேண்டிய காலம்.

3. பிரதிதினம் ஐந்து காலம் — ஜும்ஆ — ஜமாஅத் — தனித்து—முக்கீம்—முசாபர்—கலா—இவ்வேழு தொழுகை காலத்திலும் சொல்லுவது சுன்னத்து முவக்கதா.

மற்ற தொழுகைகளுக்குச் சொல்லவேண்டியதுமல்ல சுன்னத்து மல்ல.

4. தனித்து தொழுபவர் தனக்கு கேள்க்கும்படி பாங்கைச் சொல்லிக்கொள்ளவேண்டும்.

பாங்கு சொல்லுபவர்கள்.

5. உளுவுடன் சொல்லுவது நன்மை உளுவன்றிச்சொல்லுவதுங்கூடும் ஆனால் நன்மை குறைபடும் — பெண்கள் சொல்லுவதும் மக்றூஹு—முழுக்காளி சொல்லுவதும் மக்றூஹு

இந்த பாங்கு முடிந்தபின்

(உளுவில்க்கூறிய) ஷஹாதத்க்கலிமா ஒருமுறையும் சலவாத்து ஒருமுறையும் ஓதி முடித்து பின் வருமாறு துஆவை ஓதவேண்டும்.

அவையாவன

1. அல்லாஹும் மறப்பஹாதிஹித் — தஅவதித்—தாமத்தி வஸ்ஸலாத்தில் காயிமத்தி

நாயனே பூரணமான இந்த துஆவினுடையவும் —நிலையான தொழுகையினுடையவும் இரட்சகனே.

2. ஆத்திஸப்பிதினு — முஹம்மதினில்—வஸீலத்த—வல் பஸீலத்த.

---

(ஜும்ஆ)—ஒப்வுநாள். (ஜமாஅத்து)–பலர் அணிவகுத்து நிற்றல். (தனித்து)—தனிமையா நிற்றல். (முக்கீம்)—சொந்த ஊரிலிருப்பவர். (முசாபர்)—பிரயாணி. (கலா)—பாக்கிப்படல். (சுன்னத்து முவக்கதா)—பாரம்பரியஸ்திரம். (மக்றூஹு)–அருவருப்பு.

எங்கள் நாயகமாகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வசல்லமவர்கட்கு சம்மந்தத்தையும் உயர்பதவியையும் மகிமையை யுங்கொடு.

3. வஅப்அத்ஹு — மக்காமன் — மஹ்மூதநில்லதி — வஅத்தஹு.

நீ வாக்குத்தத்தஞ் செய்ததுபோல அவர்களை மக்காமன் மஹ்மூதென்றும் ஸ்தானத்தில் எழுந்திருக்கச்செய்.

4. வர்ஸுக்ன ஷபாஅத்தஹு

அவர்களின் ஷபாஅத்தை நாங்கள் பெற்றுக் கொள்ளச்செய்

5. இன்னக்க — லாத்துக்லிபுல் — மீஆத்

உண்மையாக நீ வாக்குத்தத்திற்கு விரோதஞ் செய்கின்றவனல்ல.

## இகாமது.

பறுவுத் தொழுகைக்கு மட்டும் மற்றத் தொழுகைகட்கு வேண்டியதில்லை இகாமது சுன்னத்து முவக்கதா இவை தொழுகைக்கு அணிவகுத்தல்.

1—4. முறை அல்லாஹு அக்குபர்

2—2. ஷை அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹ்

3—,, ஷை அஷ்ஹது அன்னமுஹம்மதர் றஸூலுல்லாஹ்

4—,, ஷை ஹய்ய அலஸ்ஸலாத்

5—,, ஷை ஹய்ய அலல்பலாஹ்

6—,, ஷை கதுக்காமத்திஸ்ஸலாத்து

(அர்த்தம்) உண்மையாக தொழுகை நிலைத்து விட்டது.

மற்றவர்கள். (பொருதி) அகாமஹல்லாஹு—வஅதாமஹா — மாதாமதிஸ்ஸமாவாத்து — வல்அறுழு.

வியாக்கியானம். நாயன் அதனை நிலையாக்குக வானமும் பூமியு முள்ளவரை அதனை சாஸ்வதமாக்குக.

---

(ஷபாஅத்)—மன்றாட்டம்.

7—2. மூறை அல்லாஹுஅக்குபர்.

8—1. ஷெடி லாயிலாஹ இல்லல்லாஹு

இதில் கஹுக்காமத்திஸ்லாத்துக்கு மட்டும் பொறுதி யேயன்றி மற்றதற்கல்ல

கஹுக்காமத்தைத்தவிர மற்றதின் அர்த்தங்கள் பாங்கில் சொல்லியிருப்பவையே.

## நிய்யத்து.

1. நவைத்து அன் உஸல்லியலில்லாஹித்தஆலா.

நாயனுக்கு நான் வணங்குவதற்காக நாடுகின்றேன்.

2. றக்குஅத்தைனி இரண்டு றக்அத்.
தலாதறக்குஅத்தின் மூன்று ,,
அறுபஅறக்குஅத்தின் நான்கு ,,

3. ஸலாத்தல்—தொழுகையை

## காலங்கள்.

4. பஜ்று—லுஹறு—அஸறு—மஃறிபு—இஷா

5. பறுலுல்லாஹித்தஆலா பறுலுஹாதல்வஃறத்தி

நாயனால் விதிக்கப்பட்ட இந்த நேரத்தின் பறுலை அதாவது இந்த நேரத்தின் கடமையை

6. முத்தவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கருபத்திஷ் ஷரீபத்தி (அர்த்தம்.) மகிமைவாய்ந்த கருபத்துல்லாவின் திசையை நான் நோக்கினவனாக

7. அல்லாஹு அக்குபர்.

(அர்த்தம்.) அல்லாஹு மிகப்பெரியவன் இந்த அல்லாஹுஅக்குபர் மொழிதலோடு இருசெவியின் சிறிய சோணையில் இருகாத்தின் பெருவிரலால்த் தொட்டு உந்திக்கமலத்தில் இடக்கையை கீழும் வலக்கையை மேலுமாக மணிக்கட்டைப் பிடிப்பதில் வலக்கையின் மூன்று விரல் நேராய் மேலும் பெருவிரலாலும் சின்னவிரலாலும் அணைத்துப்பிடித்துக் கட்டி நிற்பதில் மற்றொருவர்

அவையை இழுத்துப்பார்த்தாலும் பிடிவிடாவண்ணமாய் பிடித்து கஃபாவை நோக்கி நிற்பது ஸஜ்தாதலப் பார்வையுடனும் இரு காலுக்கும் இடையில் நான்கு விரற்கடைக்கு குறையாமலும் ஒரு தேங்காய் உருட்டுக்கு மேற்போகாமலும் ஆனஅழவாய் நின்று, தனியாய்த் தொழுபவர்கள் தனா ஓதவேண்டும்.

இமாமத்துச் செய்பவர்கள்.

அல்லாஹு அக்குபர் சொல்லுமுன் (இமாமன் என்றும்) அர்ததம். நான் இமாமாக.

இமாமைத்தொடர்ந்த முக்ததிகள்

அல்லாஹு அக்குபர் சொல்லு முன் மஅல்இமாமி என்றும் அர்த்தம். இமாமுடன்.

## இதன் பின் இவர்கள் தனா ஓதவேண்டும்.

தனாவும் அர்த்தமும்.

1. ஸுபுஹானகக அல்லாஹும்ம
   நாயனே நீ பரிசுத்தமானவன்

2. வபிஹம்திக்க
   உன்புகழால் ஆரம்பிக்கின்றேன்

3. வத்த பாரகஸ்முக்க
   உன் நாமம் மகிமை தங்கியது.

4. வத்த ஆலாஜத்துக்க
   உன் மகத்துவம்மிக உன்னதமானது

5. வலாயிலாஹ கைறுக்க
   வணக்கத்திற்கு பாத்திரவான் உன்னையன்றி [வேறெவருமல்ல.

இதை வாய்க்குள் மெதுவாய் ஓதி முடித்து அப்பாலும் மெதுவாய் வாய்க்குள் அஊது முதலாவதும், பிஸ்மி இரண்டாவதும் (ஓதவும்.)

அவூது பிஸ்மி இவை இரண்டின் (அர்த்தத்தை) உலுப்பக்கத்தில் பார்த்து அறிந்துகொள்ளவும்.

இனி பாத்திஹாவையும் குர்ஆனையும் பர்லு தொழுகையில்

ளுகறு — அஸறு — இந்த இரண்டு காலம் வாய்க்குள்ளும் மற்ற — மஃறிபு — இஷா — பஜ்று மூன்று காலமும் தனித்து தொழுபவர்கள் தனக்கு கேட்கும்படியும் இமாமானவர்கள் இம் மூன்று காலத்திலும் இறைந்து ஓதலாம்.

இன்னும் இமாமானவர்கள் முன் சொன்ன இரண்டு காலத்திலும் வாய்க்குள்ளுதான் ஓதவேண்டும்.

அவ்வாறு ஓதுவதிலும் இறைந்து ஓதும் பர்லுத் தொழுகையில் முதல் இரண்டு றக் அத்திற்கு இறைந்தும் மற்ற மூன்ருவது நான்காவது றக் அத்திற்கு பாத்திஹாவைத்தான் இமாமானுலும் முக்ததியானுலும்வாய்க்குள் ஓதவேண்டும். மற்றவாஜிபுசுன்னத்து நபில்தஷ்பீஹ் தொழுகைகளுக்கு எல்லாறக் அத்துகளுக்கும் தவறாமல் வாய்க்குள்ளாக தனக்கு லேசாக கேட்கும்படியும் பாத்திஹாவையும் குர்ஆனையும் விடாது ஓதிவரவேண்டும்.

ரமலான் தராவிஹ் தொழுகைக்குப்பின் இமாமானவர் வாஜிபுல் வித்துறு தொழுகையில் மூன்று றக் அத்திலும் இறைந்து ஓதுவார்.

மற்றக் காலத்தில் அதற்கு இமாம்ஜமா அத் கிடையா.

இதன்கீழ் பாத்திஹாவையும் குர்ஆனின் (பத்து) சூறுக்களையும் அர்த்தத்துடனும் அதின் காரணார்த்தத்துடனும் எழுதியிருப்பதால் ஒவ்வொரு றக் அத்துகளுக்கு பாத்திஹாவை திரும்பத் திரும்பவும் ஸூறுக்களைத் தனித்தனியாகவும் ஓதிவரவேண்டும்.

## தொழுகையில் அரபு வாக்கியம் சொல்லிக் கொள்ளலும் அதன் அர்த்தங்களும்.

1. வாஜிபுல்வித்று—அவசியமான ஒற்றை பட்டது.

2. சுன்னத்து ரஸூலில்லாஹித்த ஆலா—நாயனுடைய ரஸூல் அவர்களால் விதிக்கப்பட்ட சுன்னத்து.

3. நபில் புண்ணிய கிரியையின்—மிச்சம்.

4. தஷ்பீஹ—தொழுகை முடிவடைந்ததற்கு புகழ்மொழியும் சிப்பாரிசியும்.

### மற்றொரு விதம்.

காலத்தையும் — நக் அத்தையும்— குறிப்பிட்டு, பர்லு— வாஜிபு—சுன்னத்து —நபில்—தஷ்பீஹ—இவைகளின் தனித்தனி நிய்யத்தில் அல்லாவுக்காகத் தொழுகின்றேனெனவும் சொல்லிக் கொள்ளலாம்.

### வேறு.

(1) (நிய்யத்து) -பிரதிக்கினை—அறிக்கையிடல்.

(2) (நக்அத்) —சபிக்கினை.

(3) (வாஜிபு) ஈருத்தம்-கட்டாயம்—அவசியம்.

(4) (வித்று) ஒற்றை பட்டது.

(5) (சுன்னத்து) பாரம் பரியம்.

(6) (முஸ்தகபென்பதும்) புண்ணியகிரியையின்மிச்சம்.

## பிஸ்மில்லாஹிர் றஹுமா நிர்றஹீம்.

அல்லாஹுவின் திருநாமத்தைக்கொண்டு ஆரம்பிக்கின்றேன். அவன் மகா கிருபையுள்ளவன், மிக தயாளன் இகத்தின்கண் ஜீவித்திருக்கும் காபிர் இஸ்லாமியர் யாவற்றிராளுக்கும் கிருபை செய்பவன்பரத்தில் முஃமீனை விசுவாசர்கட்கு குற்றங்களை மன்னித்து இரட்சிப்பவன்.

### திருமக்கா ஷரீபில்

அல்லாஹுவின் புரத்தால் அறிவித்த (ஏழு வசனங்கள்)

1. அல்ஹம்து லில்லாஹி றப்பில்ஆலமீன்.
எல்லா புகழும் சர்வ ஆலங்களுடைய அல்லாஹுவிற்கே தகுதியாயிருக்கும்.

2. அர்றஹ்மா நிர்றஹீம்.
அவன் மகாகிருபை செய்பவன், மிகதயாளமுள்ளவன்.

3. மாலிக்கு யவ்மித்தீன்.
தீர்ப்பு நாளின் நியாயாதிபதி.

4. இய்யாக்க நஃறபுதுவ இய்யாக்க நஸ்தஈன்.
உன்னையே வணங்குகின்றோம்.
உன்னிடமே நல்லுதவியுந் தேடுகின்றோம்.

5. இஹ்தி நஸ்ஸிறாத்தல் முஸ்த்தக்கீம்.
எங்களுக்கு காட்டிவிடு நேரான வழியை.

6. ஸிறாத்தல்லதீன அன் அம்த்த அலைஹிம்.
எவர்கள் பேரில் நிஃமத்து செய்தாயோ அவர்களின் வழியை.

7. கைறில் மஃறலூபி அலைஹிம் வலல்லா அல்லீன்.
எவர்கள்பேரில் கோபமாக்கப்பட்டதோ இன்னும் வழிகெட்டவர்களுந் தவிர

### ஆமீன்.

நான் தாழ்ந்து கேட்பதை ஏற்றுக்கொள்வாயாக.

இந்த பாத்திஹாவின் காரணார்த்தம்.

நபியுல்லா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திரு

---

(நிஃமத்து)—சுகஜீவியம், அருட்கொடை.

வாய்மலர்ந்தருளியதாவது திருமக்கா ஷரீப் மைதானத்தின்கண் தாங்கள் செல்லும் அநேகசமயங்களில் ஆகாயமிருந்து யாமுஹம்மதென்றொலி ஏற்படும் அப்பொழுது அவர்கள் மேல்நோக்கி பார்க்குங்கால் அந்தரமாய் ஓர்சிம்மாசனத்தில்சௌந்தரமாயும்பிரமாண்டமான ரூபமுடைய ஒருவரிருப்பதைப் பார்த்தகாலமெல்லாம் பயப்பாடடைந்து ஓடோடிக் கொண்டிருந்ததாயும் அதைப்பற்றி முன் வேதங்களைப் பார்த்து அறிந்தவரும் கதீஜா நாயகியவர்கள் சிறிய தந்தையின் குமாரருமான வறக்கத்துபின் நூபில் என்பாரிடம் விஷயம் அறிவிக்க அவர் முன் போலோடாது அவர் என்னசொல்லுகின்றுரெனக் கேட்டு அறியுங்களென்ற பிரகாரம் மற்றொருகாலம் அப்பாட்டையில்ச்செல்லவும் முன்போல தொனி ஏற்படலாயின அதற்கு தாங்கள்லப்பைக்கென்று உத்தாரங் கொடுக்க போது தாம்ஜிபுரியில்என்றும் தாங்கள் இந்தஉம்மத்துகளுக்கு நபியெனச்சொன்னதோடு அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹுலா ஷரீக்கலஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வறஸுலுஹு என்று சொல்லி முடிந்தபின் அல்ஹம்து ஸுரத்து முழுவதையும் ஓதினராம்.

## பிஸ்மில்லா ஹிர்றஹ்மா நிர்றஹீம்.

அல்லாஹுவின் திருநாமத்தைக் கொண்டு ஆரம்பிக்கின்றேன். அவன் மகாகிருபையுள்ளவன் மிகதயாளன் இகத்தின்கண் ஜீவித்திருக்கும் காபிர் இஸ்லாமியா யாவற்கிராளுக்கும் கிருபை செய்பவன்பரத்தில் முஃமீனான விசுவாசர்கட்கு குற்றங்களை மன்னித்து இரட்சிப்பவன்,

## திருமக்கா ஷரீபில்.

அல்லாஹுவின் புரத்தால் அறிவித்த (ஐந்து) வசனங்கள்.

1. அலம்த்தரக்கைப — பஅலறப்புக்க
பிஅஸ்ஹாபில் — பீல்

என்ன நீர் அறியவில்லையா? உம்முடைய நாயன் யானைப் படைக்கர் விஷயத்தில் எவ்விதஞ் செய்தான்.

---

லப்பைக் — தயாராயிருக்கின்றேன்.

2. அலம்யஜ் அல்கைதஹும்—பீத்தழ்லீலின்

அவன் செய்யவில்லையா? அவர்களின் மோசக்கருத்து வழி கெட்டுப்போவதில்

3. வஅர்ஸல அலைஹிம் — தைறன் அபாபீல

இன்னுமவன் அனுப்பிவைத்தான் அவர்கள் பேரில் அபாபீல் பட்சியை.

4. தர்மீஹிம்—பிஹிஜாரத்தின் மின்ஸிஜ்ஜீலின்

அது அவர்கட்கு எறிந்தது சரமண்ணில் நின்றும் இருகிய பொடிய கற்களைக்கொண்டு,

5. பஜஅலஹும் கஅஸ்பின் மவ்க்கூல்

பின்பவன் அவர்களை மெல்லப்பட்டவைக் கோலைப் போலாக்கிவிட்டான்.

## இந்த அத்தியாயத்தின் காரணார்த்தம்.

யமன் தேயத்து அரசனான அபுரஹாவென்பவன் பேராசையும் பேராண்மையுங்கொண்டுதான் நவரத்தினங்களால் சோடனை அலங்காரஞ் செய்வித்த (கருபா) ஒன்றை கட்டிவைத்து அவை வை தரிசிக்க சர்வ தேசங்களுக்கும் அறிவித்துப் பார்த்தும் பயனடையாதால் திருமக்காஷரீபிலுள்ள (கருபாவை) இடித்துவிட்டால் தமது எண்ணப்பிரகாரம் பலிதமாகுமெனக்கருதி றசூல் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இப்பூவுலகில் தோன்ற (ஐம்பது) தினத்திற்குமுன் ஆயிரக்கணக்கான யானைகளையும் அதற்குரிய பாகர்களையும் அனுப்பிவைத்தான் திருமக்காஷரீப் குறைஷிகள் அவையை அறிந்து பயபேதை கொண்டவர்களாய் அல்லாவின் வீட்டை அல்லாவே காவல்செய்துகொள்ளுவானென்று அவர்கள் மலைப்பொதும்புகளிலும், மற்றுமிடங்களிலும் ஒழித்துக்கொண்டனர் அல்லாஹுவின் கட்டளைப்பிரகாரம் அபாபீலென்ற ஒர்வித சிறு சிட்டுக்குருவிகள் கடுகிலுஞ்சிறிதான சரமண்ணில் நின்றும் இருகியபொடிய கற்களைக்கொண்டு அவைகளைத்தாக்கி மடியச்செய்தன.

## பிஸ்மில்லா ஹிர்றஹ்மா நிர்றஹீம்.

அல்லாஹுதாலாவின் திருநாமத்தைக்கொண்டு ஆரம்பிக்கின்றேன் அவன் மகா கிருபையுள்ளவன் மிகதயாளன் இகத்தின்கண் ஜீவித்திருக்கும் காபீர் இஸ்லாமியர் யாவற்றிரர்களுக்கும் கிருபை செய்பவன் பரத்தில் முஃமீனுன விசுவாசர்கட்கு குற்றங்களை மன்னித்து இரட்சிப்பவன்.

## திருமக்காஷரீபில்.

அல்லாஹுதாலாவின்புரத்தால் அறிவித்த (நான்கு) வசனங்கள்.

1. லியீலா பிக்குறைஷின்
குறைஷிகளை பாந்தவம் வைப்பதற்கு

2. ஈலாபிஹிம்—றிஹ்லதஷ்ஷித்தாயி—வஸ்ஸைப்
அவர்களை பாந்தவம் வைப்பது மாரிகாலத்திலும், கோடை காலத்திலும், பயணத்திலும் உண்டும்.

3. பல்எஹ்புது—றப்பஹாதல்பைத்
ஆனதினால் அவர்கள் வணங்கவும் இந்த வீட்டுடைய நாயனை,

4. அல்லதீ—அத்அமஹும் — மின்ஜூயின் — வஆமனஹும்—மின்கௌப்
அவனே அவர்கட்கு ஆகாரம் கொடுத்தான், பசியை விட்டும் இன்னும் அவர்கட்கு அச்சம் தீர்த்தான் பயத்தைவிட்டும்

## இந்த அத்தியாயத்தின் காரணார்த்தம்.

நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கட்கு முன் (12-வது) தலைமுறை மூதாதையான (நஜறு பின்ஹினானு) வென்றொருவரிருந்தார் அவருடைய குடும்பத்தினர்கட்கு குறைசென்ற நாமதேயம் ஏற்பட்டன அவர்கள் திருமக்காஷரீபில் (கஃபாவின்) தொண்டர்களா யிருந்தனர் அவர்கள் மாரிகாலத்தில் யமன் தேயத்திற்கும் கோடைகாலத்தில் ஷாம்தேயத்திற்கும் பிரயாணித்துச் சென்றால் அங்குள்ளோர் (கஃபாவின்) மேன்மையைக் கருதி அவர்களை மிகமரியாதித்து பொருள் கொடுப்பதோடு ஹஜ்ஜு யாத்திரையில்சர்வ அரபியர்களும் அதிக மரியாதைபாக நடந்துவருவதோடு அவரவர்களும்பொருளீவர். இன்னும் (கஃபாவின்) மகிமையினால் இவர்களிலெவர்கட்கும்

திருட்டுப் பிரட்டு கொலை முதலிய துன்பங்களி லீடுபட்டுழலல் கொள்ளாமலும் அச்சம் பயமில்லாது காப்பாற்றப்படுவதாலும் அந்த (கஃபா)வுடைய நாயனுக்கு வணக்கமியற்றுதலானிருக்கின்றீர்கள். ஓ நன்றி கெட்டவர்களே யென்று நாயன் திருவுளம் பற்றுகின்றான்.

## பிஸ்மில்லாஹிர் றஹ்மா நிர்றஹீம்.

அல்லாஹுவின் திருநாமத்தைக்கொண்டு ஆரம்பிக்கின்றேன். அவன் மகா கிருபையுள்ளவன், மிக தயாளன் இகத்தின்கண் ஜீவித்திருக்கும் காபிர் இஸ்லாமியர் யாவற்றினாளுக்கும் கிருபை செய்பவன், பரத்தில் மூஃமினான விசுவாசர்கட்கு குற்றங்களை மன்னித்து இரட்சிப்பவன்.

## திருமக்காஷரீபில்.

அல்லாஹுவின் புரத்தால் அறிவித்த (ஏழு வசனங்கள்.)

1. அறஐத்தல்லதீயுகத்தி புபித்தீன்

என்ன நீர் பார்த்திராதீனைக்கொண்டு பொய்யாக்கி வைக்குகிற அந்த ஒருவனை.

2. பதாலிக்கல்லதீயதுஹ்ஹு ஹூல்யத்தீம

ஆனதினால் அவனே விரட்டுகின்றான் எத்தீமை.

3. வலாயஹூல்லு—அலாத்த—ஆமில் – மிஸ்க்கீன்

இன்னும் அவன் இரக்கம்கொள்ளுவதுமல்ல ஏழைகளின் ஆகாரத்தின்பேரில்.

4. பவைலுன்—லில் முஸல்லீன்

பின்பு வய்லுண்டு அந்த தொழுபவருக்கு

5. அல்லதீனஹூம்—அன்ஸலாத்திஹிம்—ஸாஹூன்

அவர்கள் தங்கள் தொழுகையைப்பற்றி அலட்சியமாயிருப்பவர்கள்.

6. அல்லதீனஹூம்—யுறாஊன.

அவர்களோ காட்டுகிறவர்கள்.

7. வயம்னஊனல்—மாஊன்

இன்னும் ஆழும் பண்டம் பதார்த்தங்களை கொடுக்க விலகிக்கொள்ளுபவர்கள்.

## இந்த அத்தியாயத்தின் காரணார்த்தம்.

கியாமத்தை பொய்யென்று சொல்லுகின்றவன் அபூஜஹிலா யிருக்கும் அபூசுப்யானும் வலீதும் ஓர் ஒட்டகத்தை அறுத்து பங்கிட்டுக் கொண்டிருக்கும்பொழுது ஓர் ஏழை மனுஷன் தனக்கும் ஒரு பங்கு கேட்டதற்கு அவனை அபூசுப்யானும் வலீதும் தடியாலடித்து துரத்திவிட்டனர். அவர்கள் தருமத்தில் ஈடுபடுவது மல்ல; அவைபோல சுற்றத்தாரையும் மற்றோரையும் தருமமிடத் தூண்டுவது மல்ல, இபுனு (அபீயும்) அவன் கூட்டத்தார்களும் தொழுகையைக் கொண்டு நன்மையடைந்தவர்களா இல்லை. எவ்வாறெனிற் அந்தரங்க பயபக்தியன்றியும் மனதில் விசுவாசமல்லாது பார்ப்பவர்கள் மெச்சுவதற்காக தொழுகுவதும் அவரவர் இருப்பிடங்களிற் தனித்திருக்குங்கால் தொழுகுவதுமல்ல, ஏழை வரியான சக்காத்துங் கொடுப்பது மல்ல, ஆளும் பொருட்களை இரவலாக கொடுத்து வாங்குவதுமல்ல, இந்தக் கூட்டத்தினர் முகப்பிச்சைக்காக தொழுது வந்தால் அவர்கள் வய் லென்னும் நரகத்திலீடுபடுவர்.

இவைபோல முகபிச்சைக்காக தொழுகும் முஸ்லிம்களுக்கும் அக்கதியே.

ஆனால் ஆளும் பொருட்களை இரவல் கொடுத்தால் நன்மை பயக்கும் அவ்வாறு செய்யாதிருந்தாலும் பாபமல்ல குடித்தன முறைமைக்கு அடுக்கதல்லவென (பத்஁ஹுல் அஸீஸுடைய) மொழி பெயர்ப்பு நூலால் அறியப்படுகின்றன.

---

## பிஸ்மில்லாஹிர் றஹ்மா நிர்றஹீம்.

அல்லாஹுவின் திருநாமத்தைக்கொண்டு ஆரம்பிக்கின்றேன். அவன் மகா கிருபையுள்ளவன், மிக தயாளன், இகத்தின்கண் ஜீவித்திருக்கும் காபீர் இஸ்லாமியர் யாவற்றிராளுக்கும் கிருபை செய்பவன், பரத்தில் முஃமினான விசுவாசர்கட்கு குற்றங்களை மன்னித்து இரட்சிப்பவன்.

## திருமக்காஷரீபில்.

அல்லாஹூ-வின் புரத்தால் அறிவித்த (மூன்று வசனங்கள்.)

(1) இன்னா அஹூ-த்தைனா கல்க்கவ்தற்

நிச்சயமாக நாம் உமக்கு கவ்தறென்ற நாமமுடைய குளத்தைக் கொடுத்தோம்.

(2) பஷல்லிலி றப்பிக்க வன்ஹற்

ஆனதினால் உம்முடைய நாயனுக்கு தொழுகும் குர்பானியுஞ் செய்யும்.

(3) இன்னஷானி அக்கஹூ-வல் அப்தற்

நிச்சயமாக உம்முடைய பகையினை வாலறுந்தவன்.

## இந்த அத்தியாயத்தின் காரணார்த்தம்.

குறைசிக்காபிரான ஆசூபின் வாயிலென்பவன் நபிஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லமவர்களை ஓர் தினம் சந்தித்து நீடித்த நேரம்வரை நல்லெண்ணம் கொண்டவன்போல விஷயங்களைப் பேசிக்கொண்டு நின்றான். அப்பால் நபிஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லமவர்கள் போய்விடவும், ஆசூபின் வாயில் கஅபாவின் வாயினுள்ச் சென்றான், அங்கிருந்த சிற்சில குறைஷிக்காபிர்கள் இதுவரை எவருடன் பேசிக்கொண்டிருந்தாயென வினவினர்கள் அதற்கு அவனுரைத்தான் இந்தஅபுத்தரோடு பேசிக்கொணடிருந்தேனென்றான் ஆண் குழந்தை இல்லாதாருக்கு அபுத்தரென்று அரபியர்களின் வழக்கச் சொல்லே அதின் கருத்தாவது அவர்கட்குபின் அவர்கள் நாமம் இராதென்ற விஷயத்தைப் பொருந்தே இவையைக் கேட்டறிந்த நபிஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லமவர்கள் ஆயாசம் அடையவும் அவையைமனதிற்கொள்ளாதிருக்க இந்த வசனங்களை அல்லாஹூ அனுப்பிவைத்தான்

குறிப்பு:—இதின் மூன்றுவது வசனத்தில் உம்முடைய பகையினை வாலறுந்தவன் எனக்கூறலுக்கு ஆரிபீன்களான ஞானவான்களின் அபிப்பிராயமாவது பகைவனான ஆசூபின் வாயிலின் காலத்திற்குப்பின் அவனுடைய நாமத்தை அவன் சந்ததிகள் பரம்பரையாய்ச் சொல்லிவர இல்லாமையாயும் இரட்சகநாயகம்

முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய நாமதேயமோ சதாவும் சர்வ உலகிலும் தொனித்து நிற்குமென்பதே.

## பிஸ்மில்லாஹிர்றஹ்மா நிர்றஹீம்.

அல்லாஹுவின் திருநாமத்தைக்கொண்டு ஆரம்பிக்கின்றேன். அவன் மகாகிருபையுள்ளவன் மிகதயாளன் இகத்தின்கண் ஜீவித்திருக்கும் காபிர் இஸ்லாமியர் யாவற்றிராளுக்கும் கிருபை செய்பவன் பரத்தில் முஃமினான விசுவாசர்கட்கு குற்றங்களை மன்னித்து இரட்சிப்பவன்.

## திருமக்காஷரீபில்.

அல்லாஹுவின் புரத்தால் அறிவித்த (ஆறு வசனங்கள்.)

(1) குல்யா அய்யுஹல் காபிறூன

முஹம்மதே நீர் சொல்லும் ஓகாபிர்களே.

(2) லாஅஹு—புது—மாதஹ்புதூன

எதை நீங்கள் வணங்குகிறீர்களோ அதை நான் வணங்குகிறவனல்ல.

(3) வலாஅந்தும்—ஆபிதூன—மாஅஹு—புது

யாரை நான் வணங்குகின்றேனோ அவனை நீங்கள் வணங்குகிறவர்களல்ல.

(4) வலாஅன ஆபிதுன்—மாஅபத்தும்

இன்னம் எதை நீங்கள் வணங்கி வருகின்றீர்களோ அதை நான் வணங்கினவனல்ல.

(5) வலா அன்தும் ஆபிதூனமா அஹு—புது

இன்னும் நீங்களும் வணங்கப் போகின்றவர்களு மல்ல; யாரை நான் வணங்குகின்றேனோ இனிமேலும்.

(6) லக்கும் தீனுக்கும் வலியதீன்

உங்களுடைய மார்க்கம் உங்களுக்கும், என்னுடைய மார்க்கம் எனக்கும்.

## இந்த அத்தியாயத்தின் காரணார்த்தம்.

குறைஷிக்காபிர்களுக்கு தலைவர்களான (1) அபூஜஹில்,

(2) ஆசு, (3) வலீது, (4) உமையஃ, (5) அருதின் இன்னுமிவர்களைச்சார்ந்த அநேககாபிர்களும் ஏகோபித்து நபிமுஹம்மது முஸ்தபா றசூல்ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கட்கு அப்பாஸு றலியல்லாஹு அன்ஹு அவர்கள்மூலம் தூதனுப்பினர் அதின் சாற்றுதலாவது நபிபெருமானாரவர்கள் காபிர்கள் வணங்கிவரும் விக்கிரகங்கட்கு ஒரு வருடம்வரை வணக்கமியற்றுதல் கொள்ளல் வேண்டுமென்றும் அவ்வாறு யாங்களும் முஹம்மதுடைய நாயனுக்கு வணக்கமியற்றுதல் கொள்ளுகின்றோமெனச் சொல்லி அனுப்பினர் அதற்காக அவர்கட்கு போதித்தலை.

## பிஸ்மில்லாஹிர் றஹ்மா நிர்றஹீம்.

அல்லாஹுவின் திருநாமத்தைக்கொண்டு ஆரம்பிக்கின்றேன். அவன் மகாகிருபையுள்ளவன் மிகதயாளன் இகத்தின்கண் ஜீவித்திருக்கும் காபீர் இஸ்லாமியர் யாவற்றிராளுக்கும் கிருபை செய்பவன் பரத்தில் மூஃமினான விசுவாசர்கட்கு குற்றங்களை மன்னித்து இரட்சிப்பவன்.

## திருமக்காஷரீபில்.

அல்லாஹுவின் புரத்தால் அறிவித்த (மூன்று வசனங்கள்.)

(1) இதாஜா அநஸ்ருல்லாஹி வல்பத்ஹு

எப்பொழுது அல்லாஹுவின் உதவியும், வெற்றியும் கிடைக்கப் பெறுமோ.

(2) வறஐத்தன்னாஸ — யதுகுலூன — பீதீனில்லாஹி — அபுவாஜன்

இன்னும் மனிதர்களை அல்லாஹுவின் மார்க்கத்தில் திரள்த்திரளாகச் சேர்தலை நீர் காண்பீரோ.

(3) பஸப்பிஹ்—பிஹம்தி றப்பிக்க—வஸ்தஹ்பிறுஹு—இன்னஹு—கானத்தவ்வாபா.

அப்பொழுது துய்தாக்கிவையும் உம்முடைய நாயனைப் புகழ்வதைக்கொண்டு இன்னும் அவனிடம் மன்னிப்பைத் தேடும் உமது மார்க்காநுசாரியர்களான உம்மத்துக்காக நிச்சயமாய் அவன் மன்னிப்பை மிகுதியாய் ஏற்றுக்கொள்ளுபவனாயிருக்கும்.

## இந்த அத்தியாயத்தின் காரணார்த்தம்.

நபிகள் சிரோமணி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பரலோகஞ் செல்வதின் அறிகுறியாய் அதற்கு இரண்டு வருடத்திற்குமுன் அல்லாஹுவினால் வெளிப்படவும் இவ்வுலகில் வந்த விஷயம் முடிவடைந்ததென கண்டு தங்களின் திருப்புதல்வி காத்தூனே ஜன்னு பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களையழைத்து தங்களின் யாத்திரையைப் பிரஸ்தாபிக்கவும் அவர்கள் அழவும் நபிகள் சிரோமணியவர்கள் அவர்களைபொறுமை செய்யும்படியும் என் உன் வீட்டாரில் முதலாவது என்னை தரிசிப்பது நீயேயென்று திருநாவால் மொழியவும் அவையை அறிந்து சந்தோஷமுற்றனர்.

## பிஸ்மில்லாஹிர்றஹ்மா நிர்றஹீம்.

அல்லாஹுவின் திருநாமத்தைக் கொண்டு ஆரம்பிக்கின்றேன். அவன் மகா கிருபையுள்ளவன், மிக தயாளன், இகத்தின்கண் ஜீவித்திருக்கும் காபீர் இஸ்லாமியர் யாவற்றிராளுக்கும் கிருபை செய்பவன் பரத்தில் மூமினான விசுவாசர்கட்கு குற்றங்களை மன்னித்து இரட்சிப்பவன்.

## • திருமக்காஷரீபில்.

அல்லாஹுவின் புரத்தால் அறிவித்த (ஐந்து வசனங்கள்.)

(1) தப்பத்யதா—அபீலஹபின்—வத்தப்ப

அபீலஹபின் இருகரம் நாசமடையக் கடவது நாசமாயும் விட்டான்.

(2) மா அற்னா—அன்ஹு—மா லுஹு—வமாக்கஸப

அவன் பொருட்களும் இன்னும் எதை சம்பாதித்தானோ அதுவும் அவனுக்கு உதவியாகாமையே.

(3) ஸயஸ்லாநாறன்——தாத்தலஹபின்

சமீபம் அவன் விழுவான் கொழுந்துவிட்டெறியும் நெருப்பில்.

(4) வம்றஅத்து ஹுஹம்மாலத்தல்ஹத்தப்

இன்னும் விறகு சுமக்கும் அவன் மனைவியும்.

(5) பீ ஜீதிஹா ஹப்லுன்மின்மஸது
அவள் கழுத்தில் விழுகும் பேரீந்தம்நாரின் கயிறு.

## இந்த அத்தியாயத்தின் காரணார்த்தம்.

நபீஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஓர் தினம் திருமக்கா நகரின்கண்ணிருக்கும் (ஸபா) வென்னும் (வரை) மீது ஏறி நின்று அந்நகரிலுள்ள சர்வ குறைஷி குலத்தினர்களையும் அழைத்துக் கூறினதாவது இவ்வரையின் அடியில் கொள்ளைக் கூட்டத்தினர் மிகுத்திருக்கின்றனர் அவர்கள் இன்றிரவு உங்களுங்கள் கிரகஞ் சென்று உங்கள்களின் உடல் பொருள் ஆவியைக் கைப்பற்ற வந்திருக்கின்றனரென்று உங்களுக்கு நான் அறிவித்தால் அதை நம்புவீர்களா என்றபோது அங்கு ஆஜராயிருந்த சர்வத்தியாளரும் ஒரே வாக்காக அவையை அத்தியமாய் நம்புவோம் எவ்வாறெனிற் நீவீர் எக்காலத்திலும் பொய்புரைப்பதில்லை என்பதை யாங்கள் நன்கு அறிவோமென்றனர் நபிபெருமானாரவர்கள் அவர்களை நோக்கி (நான் உங்களை) அல்லாஹுவின் கடுமையான தண்டனையைக்கொண்டு அச்சம் ஊட்டுகின்றேன் என்று கூறவும் நபியவர்கள் தந்தையின் தமையனான அபூலஹபு என்பான் கோபாவேசங்கொண்டு நபியவர்களை நோக்கி நீ நாசமடையக் கடவாய் இதற்காகவா எங்களை அழைப்பித்தாயென்ற வாக்கோடு கல்லை விட்டெறிந்தான் அத்தோடு விடாது எனது சந்ததிகளைக்கொண்டும் பொருட்களைக்கொண்டும் நிமிர்த்தியடைவே னென்றான்.

### இதற்காக 1-முதல் 3-வசனம்வரை

அல்லாஹுவின் சபித்தலை அபூலகபுதன் சந்ததிகளையும் மற்றும் பொருட்களைக் கொண்டும் நிவர்த்தித்துக் கொள்ள இயலாதென்றும் அவன் நரகயாதனை யடைவானென்றும்

### வசனம் நான்கிலும் ஐந்திலும்

அவனுடைய மனைவியான அபூஸுப்யானுடைய சகோதரி (உம்முஜமீலென்பாள்) நபியவர்கள் வீட்டின் அண்டை வீட்டுடையவள் அவள் செய்யும் தீதியின்மை எவ்வாறெனிற் வனஞ்சென்று முட்பொறுக்கி வந்து இரவில் நபியவர்கள் செல்லும் பாட்டையில்

பரத்தல்செய்து வைப்பள் அதிகாலை வணக்கமியற்ற அவர்கள் செல்லுங்கால் பார்வையிட்டு வெகு சாந்தமாய் அன்னடை விட்டாரின் பேரிற்செய்யும் நல்லுபகாரம்போலும் என்ற வார்த்தையைத்தவிர வேறொன்றுஞ் சொல்லாது அதின்பேரில் பாதசாரியாவர் அம்முட்களானது மல்லிகை புட்பம்போல மிருதுவாயிருக்கும் அவையை அப்புறப்படுத்திய பின்னும் முட்கொண்டு வர வழக்கம்போல சென்று பொறுக்கி பேரீத்தம் நாரினால்ச் சேர்த்துக்கட்டி சுமந்து வந்தனள். அல்லாஹுவின் உத்தாரப்பிரகாரம் அமரர்கள் அவள் கழுத்தில் விலங்காய் மாட்டி சாகச்செய்தனர் பரதீசில் நெருப்பு விலங்கிட்டு அவளை இம்சிக்கப்படுமென்ற கருத்தாய் மேற்படி வசனங்கள் உரைப்பதே.

## பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்.

அல்லாஹுவின் திருநாமத்தைக்கொண்டு ஆரம்பிக்கின்றேன். அவன் மகா கிருபையுள்ளவன், மிக தயாளன், இகத்தின்கண் ஜீவித்திருக்கும் காபீர் இஸ்லாமியர் யாவற்றிராணுக்கும் கிருபை செய்பவன் பரத்தில் முஃமினான விசுவாசர்கட்கு குற்றங்களை மன்னித்து இரட்சிப்பவன்.

## திருமக்காஷரீபில்.

அல்லாஹுவின் புரத்தால் அறிவித்த (நான்கு வசனங்கள்)

(1) குல்ஹு—வல்லாஹு—அஹது
முஹம்மதே நீர் சொல்லும் அந்த அல்லாஹ் ஒருவனே.

(2) அல்லாஹுஸ்ஸமது
அல்லாஹ் வென்பவன் தேவையற்றவன்.

(3) லம்யலிது—வலம்யூலது
அவன் பெருவதுமல்ல—பிறப்பதுமல்ல.

(4) வலம்யகுன்லஹு குபுவன் அஹது
அவனுக்கு ஒருவனும் சமமாயிருக்கவுமில்லை.

## இந்த அத்தியாயத்தின் காரணார்த்தம்.

குறைசிக்காபிர்களின் அநேகதலைவர்கள் நபிபெருமானாரவர்களிடம் எங்கள் ஆண்டவன்மார்களை பலவிதத்திலும் தூஷிக்கின்

நீர்கள் உங்கள் ஆண்டவன் விஷயமாய் எங்கள் கேள்வியாவது (அவன்) 1. யாரால் பிறந்தான் 2. யாரைப் பெற்றான் 3. என்ன வஸ்து. 4. புசிக்கு பருகுவன எவை. 5. இந்த ஆண்டவீகத்தை எங்கிருந்து பெற்றான். 6. அவனுக்குப்பின் அவையாருக்கு கிடைக்கும். 7. அவனுடைய ஆண்டவீக அலுவல்களுக்கு உதவியாய் நிற்பவர் யார்?

இந்த விஷயத்திற்காக மேற்கூறிய

நான்குவசனம் அருளப்பட்டதை நபிபெருமானாரவர்கள் விபரித்து உரைத்ததாவது

1. (அவன்) பிறக்கவுமில்லை 2. பெறவுமில்லை 3. அநாதி யானவன் 4. புசித்து பருகுவதுமல்ல 5. தன்னைக்கொண்டு தான் ஸ்தாபரமாயிருப்பவன் 6. அவனுக்குச்சமமாய்ச் சென்ற காலத்திலாவது நிகழ்காலத்திலாவது எதிர்காலத்திலாவது முன் ஒருவன் இருந்திருப்பதுமல்ல இப்போதிருப்பதுமல்ல இனிவரப் போவதுமல்ல 7. அவன் உதவி தேழ்வையற்றவன் 8. யாவற்று களுக்கும் அவனுடைய உதவி தேவையே 9. நித்திரையுள்ள வனும் நித்திரைபிடிப்பவனுமல்ல 10. அவன் சதாவுமிருப்பவன் அழிந்துபோகின்றவனல்ல 11. ஒன்றினும் அடங்காதவன் 12. மறைபொருளானவன் 13. யாவற்று குற்றங்கள் அற்ற பரி சுத்தன் இவ்வாறுரைத்தார்கள்.

## பிஸ்மில்லா ஹிர்றஹ்மா நிர்றஹீம்.

அல்லாஹுவின் திருநாமத்தைக் கொண்டு ஆரம்பிக்கின் றேன் அவன் மகா கிருபையுள்ளவன் மிக தயாளன் இகத்தின்கண் ஜீவித்திருக்கும் காபிர் இஸ்லாமியர் யாவற்றிராளுக்கும் கிருபை செய்பவன் பரத்தில் முஃமீனான விசுவாசர்கட்கு குற்றங்களை மன்னித்து இரட்சிப்பவன்.

## திருமதீனமுநவ்வராவில்

அல்லாஹுவின் புறத்தால் அறிவித்த (ஐந்து வசனங்கள்)

1. குல் அஊது பிறப்பில்பலக்

முஹம்மதே நீர் சொல்லும் நான் காவல் தேடுகிறேன் சுபுஹுவின் நாயனைக்கொண்டு

(2) மின்ஷர்ரிமாகலக

அவன் உண்டுபண்ணின ஒவ்வொன்றின் தீங்கைவிட்டு.

(3) வமின்ஷர்ரி காஸிக்கின் இதா வக்கப

இருளடைந்து அவை எப்பொழுது படர்மோ அதின் தீங்கை விட்டும்.

(4) வமின்ஷர்ரிந்நப்பாதாத்தி பில் உக்கதி

முடிச்சுகளில் (மந்திரித்து) ஊதும் பெண்களின் தீங்கை விட்டும்.

(5) வமின்ஷர்ரி ஹாஸிதின் இதாஹஸத

எப்பொழுது ஹஸது வைப்பானோ அவனின் தீங்கைவிட்டும்.

## பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்.

அல்லாஹுவின் திருநாமத்தைக்கொண்டு ஆரம்பிக்கின்றேன். •அவன் மகா கிருபையுள்ளவன், மிக தயாளன், இகத்தின்கண் ஜீவித்திருக்கும் காபீர் இஸ்லாமியர் யாவற்றிராளுக்கும் கிருபை செய்பவன், பரத்தில் முஃமினான விசுவாசர்கட்கு குற்றங்களை மன்னித்து இரட்சிப்பவன்.

## திருமறைஞமுநவ்வராவில்

அல்லாஹுவின் புரத்தால் அறிவித்த (ஆறு வசனங்கள்.)

(1) குல்அஊது பிறபின்னாஸ்

முஹம்மதே நீர் சொல்லும் நான் காவற் தேடுகின்றேன் மனிதர்களின் றப்பைக்கொண்டு.

(2) மலிக்கின்னாஸ்

மனிதர்களின் ஏகாதிபதியைக்கொண்டு.

(3) இலாஹின்னாஸ்

மனிதர்களின் வணக்கத்திற்குரியவனைக்கொண்டு.

(4) மின்ஷர்ரில்வஸ்வாஸ்—அல்கன்னாஸ்

மறைந்து கொண்டிருக்கும் ஷைத்தானுடைய வஸ்வாஸின் தீங்கைவிட்டு.

(5) அல்லதியுவஸ்விஸுபீஸுதூறின்னாஸ்

அவனே மனிதர்களின் மனதுகளிற் வஸ்வாஸ் போடு

பவன்.

(6) மினல்ஜின்னத்திவன்னாஸ்
ஜின்களில் நின்றும் இன்னும் மனிதர்களில் நின்றும்.

## இந்த இரண்டு அத்தியாயமும் ஒரே.

### விஷயத்தை பொருத்ததால் அதின் காரணார்த்தம்.

ஓர் எகூதியின் புதல்வன் நபிகள் நாயகமவர்களின் தொண்டனா யிருந்தவனை (லுபைதுபுனு அஃசமுடைய) புதல்விகள் அவனை வசப்படுத்தி நபிகள் சிரோமணியவர்கள் தலைவாருஞ் சீப்பை எடுத்துவரச்செய்து அதனுடைய பல்லுகளை யுடைத்து நபிபெருமானவர்கள் பேரால் செய்வினை செய்து தருவானென்னும் கிணற்றில் ஒரு கல்லின்கீழ் புதைத்து வைத்திருந்தன இவையை ஜிபுரீயில் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வந்து நபி அவர்கட்கு அறிவிக்கவும். நபியவர்கள் அலியின்கர்ரமல்லாஹு வஜ்ஹகு அவர்களை அழைத்து அனுப்பி எடுத்துவர உத்தரவிட்ட பிரகாரம் எடுத்து வரவும் அதில் (பதினொரு) முடிச்சிட்டிருந்தது இதற்காக இந்த இரண்டு அத்தியாயமும் பதினொரு வசனங்களாய் (அல்லாஹு) ஜிபுரீயில் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்மூலம் அனுப்பி வைத்தான். அவர்கள் ஒவ்வொரு வசனமாக ஓதவும் ஒவ்வொரு முடிச்சாய்பதினொரு முடிச்சும் அவிழ்ந்துவிட்டன.

### இதன் மகிமை யாவன.

(உகபத்பின் ஆமிறுறலியல்லாஹு அன்ஹு அவர்கள்)

நபியுல்லா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களைக்கொண்டு (றிவாயத்து) செய்கின்றார்கள். (அவையாவன) பில்லிசூனியம் வஞ்சனை ஷைத்தான் முதலிய விஷயங்களுக்கு இந்த இரு அத்தியாயத்தைக்கொண்டு ஓதினால் மிக பிரயோசனம் தருமென்றும் கூறுகின்றார்கள்; இது நிற்க.

தொழுகையில் பாத்திஹா ஓதியபின் வாய்க்குள் மெள்ள ஆமீன்சொல்லி அப்பால்அவைபோல பிஸ்மில்லாவைப்பூரா வாய்ச் சொல்லி முடித்து அதின்பின் (குர்ஆன்) ஓதுவதில் ஒரு சூறா அல்லது ஒரு பெரிய ஆயத்து அல்லது மூன்று சிறிய ஆயத்து

இவ்வாராக ஓதி முடிந்தபின்

அல்லாஹு அக்குபர் சொல்லிக்குனிந்து றுக்கூ செய்வதில் சிரசும் புட்டியும் தராசு நிறை சமமா யிருப்பவைபோலவும் உள்ளங்கை இரண்டாலும் விரல்கள் கீழ் நோக்கலாய்; இரண்டு முட்டுக்காலைப் பிடித்து கீழ்நோக்கி ஸஜ்தாதலப் பார்வையாக குனிந்து நின்று,

1. மும்முறை (ஸுப்ஹான றப்பியல் அலீம்) என்று வாய்க்குள் மெள்ளச்சொல்லுதலில் மூன்று தஷ்பீஹு நேரம் தாமதித்து நிற்றல்.

(அர்த்தம்) என் ரட்சகன் மகா பரிசுத்தனும் மகா மேன்மையானவனுமாம்.

2. அப்பால் (ஸமியல்லாஹுலிமன் ஹமீதஹு) வென்று தனக்கு கேள்க்கும்படி ஒருமுறை சொல்லி நிமிர்தல் கொள்ளல்.

(அர்த்தம்.) நாயன் தன்னைப் புகழ்ந்தவனுக்காக ஏற்றுக் கொண்டான்.

3. அதின்பின் ( அல்லாஹும்மறப்பனுவலீக்கல் ஹம்து ) வென்று அடுத்தவருக்கு கேள்க்கும்படி ஒருமுறை நிமிர்ந்து சிறு நிலை நிற்றலில்ச் சொல்லி ஒரு தஷ்பீஹுக்கு குறையாமலும் மூன்று தஷ்பீஹ நேரம் தாமதிப்பது.

(அர்த்தம் ) நாயனே எங்கள் ரட்சகனே எல்லாப் புகழும் உனக்கே தகும்.

4. அல்லாஹு அக்குபர் சொல்லி ஸஜ்தாவில்ப் போவது.

பாண்டை என்ற கணைக்கால் இரண்டு முட்டுக்கால் இரண்டு இரண்டு உள்ளங்கை விரலுள்பட கஅபாத்திசை மேற்கு நோக்கலாய் சிரசை பணிய வைப்பதில் நாசி நுனி முதலாவது அப்பால் நெற்றி ஆக உருப்பு எட்டில் நாசி நுனி நீங்கலாய் மற்ற எழு உருப்புகளிலும் சமபாரமாய் செய்து.

5. (ஸுப்ஹான றப்பியல்அஃலா)வென மும்முறைசொல்லி

(அர்த்தம்.) என் ரட்சகன் மகா பரிசுத்தனும் மகா உன்னத

மானவனுமாம்.

அப்பால் அல்லாஹு அக்பரென்ற சொல்லோடு சிறு இருப்புக்கு வந்து ஒரு தஸ்பீஹுக்கு குறையாமலும் மூன்று தஸ்பீஹு நேரம் தாமதித்திருந்து அப்பாலும் அல்லாஹு அக்பரென்ற சொல்லோடு ஸஜ்தாச் செய்வது முன்போல மும்முறை சொல்லி அல்லாஹு அக்பரென்ற சொல்லோடு இருப்புக்கு வந்து அத்தஹிய்யாத்தை ஓதவும்.

ஆறுவிதில் (2) (3) (4) றக் அத்களுக்கு எவ்வாறு நடத்த வேண்டுமோ அவ்வாறு நடத்திக்கொள்ளவேண்டும்.

## அத்தஹிய்யாத்து.

அதாவது நாயனுக்கு காணிக்கை சமர்ப்பித்தல்.

(1) அத்தஹிய்யாத்துலில்லாஹி
சொற் சம்பந்தமான எல்லா வணக்கங்களும்.

(2) வஸ்ஸலாத்து
தேக சம்பந்தமான எல்லா வணக்கங்களும்.

(3) வத்தய்யிபாத்து
பொருள் சம்பந்தமான எல்லா வணக்கங்களும்.
அல்லாஹு ஸுப்ஹான ஹுத்தஆலாவுக்கேயாம்.

(4) அஸ்ஸலாமு அலைக்க அய்யுகன் நபிய்யு வறஹ்மத்துல் லாஹி வபறகாத்துஹு
நபியும் அல்லாவின் றஹ்மத்துமானவரே
தங்களுக்குச் சேமமும் விருத்தியு முண்டாவதாக

(5) அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ்ஸாலிஹீன்
ஸாலிஹீன்களான அல்லாவின் அடியார்களுக்கும் எங்களுக்குஞ் சேமமுண்டாவதாக.

(6) அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு
வணக்கத்திற்கு பாத்திரவானான நாயன் அல்லாவைத் தவிர வேறொரு நாயனில்லை என்று உறுதியாய்ச் சொல்கின்றேன்.

(7) வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூவறசூலுஹு
முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள்

நிச்சயமாய் நாயனுடைய அடியாரும் திருத்தூதருமென்று உறுதியாய்ச் சொல்கின்றேன்.

தரூதே இப்றாஹீம் நாயனிடம் விரும்பி வேண்டல்.

(8) அல்லாஹும்மஸல்லி அலாமுஹம்மதின்— வஅலாஆலி முஹம்மதின்—கமாஸல்லைத்த — அலாஇப்றாஹீம வஅலாஆலி இப்றாஹீம — இன்னக்கஹமீதுன்மஜீது

நாயனே இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்மீதும் அவர்கள் சந்ததியார்கள்மீதும் நீ றஹ்மத்தென்ற கருணை கூர்ந்தது போல முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள்மீதும் அவர்கள் சந்ததியார்கள்மீதும் உனது றஹ்மத்தென்ற கருணை கூர்ந்தருள்வாயாக. உண்மையாக நீ புகழ்பெற்ற தலைமைத்தனத்துக் குறியவனுமிருக்கின்றாய்.

(9) அல்லாஹும்மபாரிக்கு அலாமுஹம்மதின் வஅலாஆலி முஹம்மதின்—கமாபாறக்த — அலாஇப்றாஹீம — வஅலாஆலி இப்றாஹீம் இன்னக்கஹமீதுன்மஜீது

நாயனே இப்றாஹீமலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும் அவர்கள் சந்ததியார்களுக்கும் அபிவிருத்தியை அனுக்கிரகஞ் செய்தது போல் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்கும் அவர்கள் சந்ததியார்களுக்கும்

அபிவிருத்தியை அனுக்கிரகஞ் செய்வாயாக. உண்மையாக நீ புகழ்பெற்ற தலைமைத்தனத்துக் குறியவனுமிருக்கின்றாய்.

(10) துஆ மௌதூறுநாயனிடம் மீட்புத்தேடல்

அல்லாஹும்மஃபிர்லீ

நாயனேஎன்னை உன்கிருபைபால் மன்னிப்பாயாக

வலிவாலிதய்ய

என் மாதாபிதாக்கள்

வலிஉஸ்தாதீ

என் குருமார்கள்

வலிஜமீயில்முஃமினீனவல்முஃமினாத்தி

மூஃமினான எல்லா ஆண்பெண்கள்

வல்முஸ்லிமீனவல்முஸ்லிமாத்தி

இஸ்லாமான எல்லா ஆண் பெண்கள் ஆகியவர் களையும்

பிரஹ்மத்திக்க

உன் கிருபையால் மன்னிப்பாயாக

யாஅற்ஹமர்ருஹிமீன்

நீயோ எல்லாகிருபையாளரைப் பார்க்கிலும் அதி மேலான கிருபையுள்ளவன்.

(11) இனி சலாம் கூறல்.

அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மத்துல்லா

அல்லாவின் ஸலாமும் அவனது கிருபையும் உங் கள் பேரில் உண்டாவதாக.

## பர்லுத்தொழுகை முடிந்தவுடனே ஓதும் ஆயத் துக்குர்ஸி—மற்ற எந்தத்தொழுகைக்குமல்ல.

அதாவது ஸிம்மாசன வசனம்.

(1) அல்லாஹு—லாயிலாஹ இல்லா ஹு—வல் ஹையுல் கையூம்

அல்லாஹு—வான நாயனேயன்றி வேறொரு நாயன் யாதொருவனுமல்ல அவன் என்றென்றும் இருப்பவன்

(2) லாதவ்குதுஹு—ஸினத்துன்—வலாநௌம்.

எவ்வாறான தூக்கமும் நித்திரையும் அவனுக்கு உண்டாவதில்லை

(3) லஹு—மாபிஸ்ஸமாவாத்தி—வமாபில்அற்லி

வானுலகிலும் பூஉலகிலுமுள்ள யாவற்றுக்களும் அவனுடையதாயிருக்கும்

(4) மன்தல்லதி— யஷ்பஉஹு—இந்தஹு —இல்லாபி இத் னிஹி

அவனுடைய உத்தரவுகொண்டே அன்றி எவர் அவனிடத்தில் மன்றுடுகிறவர்கள்

(5) யஃலமுமாபைஜ—இநிறிம்—வமாகல்பஹு௱ம்

இம்மையின் காரியத்தில் கல்க்ருகளென்ற உயிரினங்களுக்கு முன்னால்சென்றதும் மறுமையின் காரியத்தில் பின்னால் வரப் போவதையும் நாயன் அறிவான்

(6) வலாயுஹீத்தூன— பிஷைப்யின்— மின்இல்மிஹீ— இல்லாபிமாஷாஅ

அவன் அறிந்த வஸ்துக்களிற் யாதொன்றையும் அவர்கள் தெளிவாய் அறியமாட்டார்கள் ஆனால் அவர்களுக்கு அவன் தெரிவித்தாலொழிய அதில்எதைநாடினானோ அதைத்தவிர

(7) வஸிஅ குர்ஸிய்யு—ஹுஸ்ஸமாவாத்தி வல்அர்ல

அவனுடைய குர்ஸி என்பது மிகவும் விரிவாயிருப்பதால் வானம் பூமிக்கும் விலாசமாகும் குறைபட்டதல்ல

(8) வலாயவூதுஹு—ஹிப்ளுஹுமா

அவ்விரண்டையும் காப்பாற்றல் அவனுக்கொரு பெரிதல்ல

(9) வஹுவல் அலிய்யுல் அலீம்

இன்னும் அவன் இணைதுணைகளை விட்டு மேன்மையானவனாகவும் எல்லார்வஸ்துக்களைவிட வல்லபமுடையவனாகவுமிருக்கின்றான்

## இதன் பின் ஓதும் துஆ.

(1) அல்லாஹும்மஅன்தஸலாம்

எங்களின் நாயனே நீயாகின்றவன் ஈடேற்றமாகச் செய்து வைப்பவன்

(2) வமின்க்கஸ்ஸலாம்

ஈடேற்றமாவது உன்னுடையதாயிருக்கும்

(3) வஇலேக்கயர்ஜிஹுஸ்ஸலாம்

ஈடேற்றம் உன்னிடத்தில்தான் திரும்பும்

(4) ஹய்யனாறப்பனாபிஸ்ஸலாம்

எங்களுடைய நாயனே ஈடேற்றத்தைக் கொண்டு எங்களை ஜீவித்து வைப்பாயாக.

(5) வஅத்கில்னாபிறஹ்மத்திக்கதாரஸ்ஸலாம்

இன்னும் எங்களை உன்னுடைய கிருபைகொண்டு ஈடேற்றத்தின் வீட்டிற் புகுதிவிப்பாயாக.

(6) தபாறக்த்தறப்பனா — ஒத்த — அலேத்தயா தல்ஜலாலி — வல்இக்றாம்

எங்கள்நாயகனே நீ எங்களை விருத்திசெய்தாய் மகிமையும் சங்கையுமுள்ள நாயனே நீ எங்களை உயர்த்தி வைத்தாய்.

(7) பிறஹ்மத்திக

உன் கிருபை கொண்டு.

(8) யாஅர்ஹமர் — றாஹிமீன்

கிருபை செய்கிற யாவற்றினும் மிக கிருபை செய்கின்றவனே.

(9) வஸல்லல்லாஹுதஆலாவசல்லம் — அலாகைறி ஹல்க்கிஹி செய்யிதினா முஹம்மதின்

நமக்கெல்லாம் நாயகமாயும் சர்வ வஸ்துக்களைவிட அதி மேலான முஹம்மதெனும் திருநாமத்துடையவர்கள் மீதும்

(10) வஆலிஹி — வஸஹ்பிஹி — அஜ்மயீன்

இன்னும் அவர்கள் கிளை கோத்திரத்தார்கள் — தோழர்கள் மூமினான அதாவது விசுவாசியான சர்வ ஆண் பெண்கள் மீதும் உயர்த்தியான நாயன் கிருபையும் ஈடேற்றமும் சொல்வானாக.

(11) வஸுப்ஹானறப்பிக்கறப்பில் — இஜ்ஜத்தி அம்மா யஸிபூன்

விக்கிரக ஆராதனையுடையவர் வர்ணித்து கூறும் நாயனும் நிகரொண்ணாத சுத்தசம்பூரணனான அல்லாஹுத்தஆலாவை துதி செய்கின்றோம்.

(12) வஸலாமுன் — அலல்முர்ஸலீன

ஈடேற்றமாவது நாயனின் தூதர்கள் மீதாயிருக்கும்.

(13) வல்ஹம்துலில்லாஹிறப்பில்ஆலமீன்

புகழ் அடங்கலும் ஆலத்துடைய அதாவது உலகத்துடைய யாவற்றினையும் வளர்க்கும் நாயனுக்கா யிருக்கும்.

# இஸ்திக்பாரும் துஆவும்

(1) வ நஜாத்தன் மினன்னார்

நரகலோகத்தைவிட்டும் காப்பாற்றி கிருபை புரிவாயாக

(2) றப்பனஃம்பிற்—வற்ஹம்

நாயனே என் குற்றங்களை பொருத்தருள் இன்னும் கிருபை செய்

(3) வஅந்தகைருற்—ருஹிமீன்

நீ கிருபையாளர்களில் மேலான கிருபையாளன்

(4) அஸ்த்தஹ்பிறுல்லா—அஸ்த்தஹ்பிறுல்லா

நான் நாயனிடம் குற்றத்தை மன்னிக்கத் தேடுகின்றேன்—நான் நாயனிடம் குற்றத்தை மன்னிக்கத்தேடுகின்றேன்

(5) அஸ்த்தஹ்பிறுல்லாஹில் அலீமில்கரீமில்லதீ

நான் நாயனிடம் குற்றத்தை மன்னிக்கத் தேடுகின்றேன் அவன் சங்கையான வல்லபமுடையவன்

(6) லாயிலாஹ இல்லாஹுவல்

இன்னும் அவனைத்தவிர வேறு நாயனில்லை

(7) ஹையுல் கையூம்

அவன் சதாவும் ஜீவித்திருப்பவன்

(8) வஅத்தூபு இலைஹி

இன்னும் நான் அவனிடத்திற் குற்றத்திற்கு மன்னிப்பு கேட்டு நிற்கின்றேன்

(9) வஅஸ்அலுஹு தௌபத்தன்

அவனிடத்தில் இன்னும் நான் கேட்டுக்கொள்கின்றேன் நான் கேட்கும் மன்னிப்பை ஒப்புக்கொள்வதற்கு

(10) வல்மஹ்பிறத்த

இன்னும் சகல வையான தப்பிதங்களிலும்

(11) மின்ஜமீயில்கத்தாயா

குற்றம் பொருக்குதலை கேட்டுக் கொள்கிறேன்

(12) வத்தஹாபி—வல் ஆதாம்

இன்னும் கோய்வினை பாவங்கள் முதலியதை நிவிர்த்திக்கும்பொருட்டு நான் காவல் தேடுகின்றேன்

## வாஜிபுல்வித்துறு (3) றக்அத் தொழுகையின் விபரமாவன.

1. முதலாவது றக்அத்தில் நிய்யத்து — தஹ — அஊது பிஸ்மி அல்ஹம்து இவைகளை பூரா ஓதி, ஆமீன்கூறி அப்பால்பிஸ்மியை பூராவுஞ் சொல்லி இன்னாஅன்ஸல்னாஹு—ஸூறா ஓதவும்.

(1) இன்னாஅன்ஸல்னாஹுபீலை லத்தில்கத்றி

ஸ்திரமாக குர்ஆனை நாம் கதறின் இரவிலிறக்கி வைத்தோம்.

(2) வமா அதுறாக்கமாலைலத்துல்கத்று

இன்னும் உமக்கு எது அறிவித்தது கத்றின் இரவு யின்னவென்று

(3) லைலத்துல்கத்றிகைறுன்மின்அல்பிஷஹ்றர்

கத்றின் இரவு நன்றாயிருக்கும் ஆயிர மாதத்தைக் காண.

(4) தநஸ்ஸலுல்மலாயிக்கத்து —வற்ரூஹு— பீஹா— பிஇதினிறப்பிஹிம்—மின்குல்லிஅம்றின்

அதில் மலக்குகளும் ஜிபுரியிலும் தங்கள் நாயனின் உத்தரவைக்கொண்டு ஒவ்வொரு கருமங்களைப்பற்றி இறங்குகிறார்கள்.

(5) ஸலாமுன் ஹிய—ஹத்தாமத்லயில்பஜ்ர்

இதில் அடைக்கலமுண்டு அதாவது பஜ்று உதயமாகும்வரை.

### இந்த ஸூறா இறங்கிய காரணம்.

ஓர் தினம் நபியுர்றஹ்மத்து முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஸஹாபாக்களிடம் திருவுளமானதாவது

---

பஜ்று என்பது வைகறை அதாவது விடியற்காலம்,

பனீ இஸ்ருயீல் கூட்டத்திற் ஒரு வாலிபர் ஆயிர மாதம் ஆயுதம் தரித்தவராய் அல்லாவுடைய பாதையில் பீஸபீல் செய்தா லென்றதைக் கேட்ட ஸஹாபாக்கள்.

நாமள் சொற்ப ஆயுளுள்ளவர்கள்தானே இந்தப் பாக்கி யத்தை எவ்வாறு பெற்றுக்கொள்வதென்று ஆயாசமுற்றார்கள் அப்பமேவ இந்த ஸூறா இறங்கிற்று.

## அல்லாஹ்ஹு ஸுப்ஹானஹூவத்த ஆலாவின் திருவுளமாவது

அந்த ஆயிர மாதத்திலும் மேலாக ஓர் இரவு கத்றென்பதை மேன்மையாக்கி இருக்கின்றோம் அதாவது அதில் குர்ஆனை இறக்கி வைத்தோம் மலக்குகளும் ஜிபுரியிலும் சர்வ நன்மையான காரியங்களின் பேரிலிறங்குவார்கள் அவ்விரவில் விடி லெறும் வரை ஒரு நன்மை செய்தால் ஆயிர மாதம் செய்த நன்மைக் கீடாகும்.

விலக்கலில்லாத காரியத்தைப் பற்றி பிரார்த்தனை செய்பவ ருக்கும் இபாதத்களும் கபூலாகும்

2. இதன்பின் வழக்கம்போல கிரியானுட்டிப்புகளை நடத் திக்கொண்டு தக்பீருடன் வந்து நின்று இரண்டாவது றக் அத் தில் பிஸ்மி அல்ஹம்து ஆமீன் அப்பாலும் பிஸ்மி இவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு (தல்பா அப்புஹல்காபி ரான) ஸூறாவை ஓதி முடித்து தக்பீர் தஸ்பீஹ் அத்தஹிய்யாத்தில் அப்துஹூவ றஸூலுஹூவரை கூறியபின் தக்பீருடன்

3. மூன்றாவது றக் அத்திற்கு வந்து பிஸ்மி அல்ஹம்து ஆமீன் அப்பாலும் பிஸ்மி குல்ஹூவல்லாஹூ அஹது ஸூறா இவைகளை பூர்த்தி பண்ணுதல் கொண்டு தக்பீருடன் விட்டுக் கட்டி குனூத்து ஓதவும் அவையாவன.

(1) அல்லாஹும்ம இன்னா நஸ்த்தஈனுக்க

நாயனே உன்னிடத்தில் நிச்சயமாக உதவி தேடு கின்றோம்.

(2) வநஸ்தக்பிறுக்க

பிழை பொறுக்கத் தேடுகின்றோம்.

(3) வ௩றமினுபிக்க
உன்மீது ஈமான் கொண்டோம்.

(4) வநத்தவக்கலு அலய்க்க
உன்மீது நம்பிக்கை வைக்கின்றோம்.

(5) வநுத்னீ அலய்க்கல்—கய்றகுல்லைறு
நன்மையால் உன்னைப் புகழ்கின்றோம்.

(6) வநஷ்குருக்க
உனக்கு நன்றி செலுத்துகின்றோம்.

(7) வலாநக்புறுக்க
உனக்கு நாங்கள் குபிர்செய்யவில்லை.

(8) வநஹ்லவு
நீ விலக்கினவைகளை விட்டு விடுகின்றோம்.

(9) வநத்றுக்கு—மன்யப்ஜுறுக்க
உனக்கு மாறுசெய்பவனை விட்டும் நீங்கிவிட்டோம்.

(10) அல்லாஹும்ம இய்யாக்கநஃபுது
நாயனே உன்னையே வணங்குகின்றோம்.

(11) வலக்கநுஸல்லி
உன்னையே தொழுகின்றோம்

(12) வநஸ்ஜுது
உனக்கே ஸஜ்தாச்செய்கின்றோம்

(13) வஇலைய்க்க நஸ்ஆ
உன்னிடமே முயற்சி செய்கின்றோம்

(14) வநஹ்பிது
உனக்கே பயப்படுகின்றோம்

(15) வநற்ஜு—றஹ்மத்தக்க
உன்னுடைய மிகுத்த கிருபையை நம்பிக்கை வைக்கின்றோம்

(16) வநக்ஷா அதாபக்க

உன்னுடைய வேதனைக்குப் பயப்படுகின்றோம்.

(17) இன்ன அதாபக்கல்-ஜித்தபில்குப்பாறி முல்ஹிக்குன் உன்னுடைய கடின வேதனையானது காபிர்களுக்கு நிட்சயமாய்க்கிடைக்கும்.

அப்பால் தக்பீருடன் மற்றும் கிரியானுட்டிப்புக்களையும் பூரா அத்தஹிய்யாத்தையும் வழங்கல் போல நடத்தி வெளியாக வேண்டும்.

குனூத்து ஓத சாத்தியப்படாதவர்களுக்கு வருமாறு மூன்று வித விபரங்கள் கூறியிருப்பதால் அவ்வாருகளை தனித்தனியாய்ச் சொல்லிக்கொள்வதிலும் குனூத்தைப்போலாகும்.

(1) றப்பனு ஆத்தினு

(அர்த்தம்) எங்களின் நாயனே எங்களுக்கு கொடுத்துவிடு

பித்துன்யாஹஸனத்தன்

(அர்த்தம்) இம்மையிலும் நன்மையை

வ—பில்ஆகிரத்திஹஸனத்தன்

(அர்த்தம்) இன்னும் மறுமையிலும் நன்மையை

வ—கினுஅதாபன்னுர்

(அர்த்தம்) இன்னும் நரகயாதனையை எங்களை விட்டும் காத்தருள்வாயாக

## இன்னும் ஓர் விதம்.

(2) யாறப்பீ-யாறப்பீ—யாறப்பீ என்று மும்முறை சொல்லுவதும் சரியாகும்

(அர்த்தம்) என்னை வளர்ப்பவனே—என்னைவளர்ப்பவனே—என்னை வளர்ப்பவனே

## மற்ரொரு விதம்.

(3) அல்லாஹும்மஃபிர்லீ— அல்லாஹும்மஃபிர்லீ— அல்லாஹும்மஃபிர்லீ இவ்வாரு மும்முறை சொல்லுவதும்சரியாகும்.

(அர்த்தம்) நாயனே என் குற்றங்களைப் பொருத்தருள்வாயாக. நாயனே என் குற்றங்களைப் பொருத்தருள்வாயாக. நாயனே என் குற்றங்களைப் பொருத்தருள்வாயாக.

## இதன் பின் கூறல்.

ஸுப்புஹானமலிக்குல்குத்தூஸ்

மிக பரிசுத்தமான அரசன் நிருமலனுயிருக்கின்றான்

அதாவது மாசின்மையாயிருக்கின்றான் (இவையை பாதீசில்) நமது அருமைநாயகமவர்கள் மகுமூதாவெனும் ஸ்தலத்திற்குப் பிரயாணிக்கும் பொழுது பிரகாசமானஉடைகள் அணியப்பெற்ற உடனே அவ்வுடையையும் முகச்சோதியையும் பார்த்து மலக்கு களான அமரர்கள் அதிசயித்து ஆர்ப்பரித்துச்சொல்லுவார்களாம்

இவையை இரண்டு முறைமெதுவாயும் ஒருமுறைகொஞ்சம் இரைந்தும் ஆக மும்முறை சொல்லியபின் ஒருமுறை சொல்ல வேண்டியதாவது:—

றப்புல் மலாயிக்கத்திவர்ரூஹு

மலாயிக்கத்துகள் ஜிபுரீல் ஆகியவர்களின்ரக்ஷகன்

முன் இந்த துஆவை ஒதி முடித்து அப்பால் பாத்திஹா ஆரம்பிப்பது மிகுதி மேன்மையான புகழென்றும் கித்தாபு களால் அறியப்படுகிறது.

(1) அல்லாஹும்ம இன்னீ அவூதுபி—றிலாயிக்க—மின்ஸக் திக்க—வபிமுஆபாயிக்க—மின்உக்கூபத்திக்க

நாயனே உன் கோபத்தில் நின்றும் உன் இஷ்டத் துடனும் உன் வேதனையில் நின்றும் உன் பாதுகாப்புடனும் உன் னிடம் காவல் தேடுகின்றேன்.

(2) வஅஊதுபிக்கமின்க்க

இன்னும் உன் வேதனையில் நின்றும் உன் றஹ்மத் துடன் காவல் தேடுகிறேன்.

---

(குர் ஆன்)—திருமறை. (கத்ற்)—விவரக்கற்பனை. (பீஸபீல்)—மார்க்க யுத்தம். (ஸூறா)—அத்தியாயம். (ஈமான்)—நிண்ணயம் (குபிர்)—மார்க்கத்தில் முரண்பாடும் அமைபாமையும். (ஸஜ்தா)—சிரம்பணிதல். (காபிர்)—இஸ்லாமார்க்க கட்டளையை நிரா கரித்தவன். குனூத்து—வழிபடல்.

(3) லாஉஹ்஁ஸீ—தஞு அன் அலைய்க்கஅன்த—கமா அத்னைத்த—அலாகப்ஸிக்க

உன்னுடைய நப்னைஸ நீ புகழ்ந்து கொண்டது போல உன்னுடையபுகழைகணக்கிடக்கூடாதவனாயிருக்கின்றேன்.

(4) லக்கல்ஹம்து யா அல்லாஹு

நாயனே புகழ் அடங்கலும் உனக்காயிருக்கும்.

(5) யாமஹ்பூது—யாறஹ்மானு

யாவரும் வணங்கப்பட்டவனே யாவருக்கும் கிருபை செய்பவனே

(6) யாறஹீமு

பரலோகத்தில் விசுவாசர்களுக்கு மட்டும் சொந்தக் கிருபைசெய்பவனே.

(7) அல்லாஹும்மஸல்லி—வஸல்லிம்

எங்களின் நாயனே நீ கருணைசெய் இன்னும் ஈடேற்றமாக்கிவை

(8) வபாரிக்அலாஸைபிதினு

எங்களுடைய நாயகத்தின்மீதும் கிருபைசெய்

(9) வமவ்லானு முஹம்மதின்

இன்னும் முஹம்மதென்றும் திருநாமம் பெற்ற எங்களுடைய எஜமான் அவர்கள் மீதும் கிருபைசெய்

(10) வஆலிஹி—வஸஹ்பிஹி

அவர்கள் கிளைகோத்திரங்கள் மீதும் இன்னும் அவர்கள் தோழர்கள்மீதும் கிருபைசெய்.

(11) அததமாபீ—இல்மில்லாஹி

நாயனே உன்னுடைய அறிவில் உண்டாயிருக்கிற எண்ணப்பிரகாரம் கிருபைசெய்

(12) ஸலாத்தன்தாயிமத்தன்—பிதவாமி—முல்க்கில்லாஹி

நாயனுடைய ராஜாங்கம் நீடித்திருக்கிற சதாவும் ஸலவாத்தென்னும் கருணை செய்திராத கருணைசெய்வாயாக

இதன் பின் அல்பாத்திஹா

அதாவது பாத்திஹாவை ஓதுவோமாக வெனக்கூறி

அஊதுபிஸ்மி அல்ஹம்து இவைகளை ஒருமுறை பூராவாயும் குல்ஹுவல்லாஹு அஹது மும்முறை பூராவாயும் குல்அஊது பிறப்பில்பலக்கு ஒருமுறை பூராவாயும் குல்அஊதுபிறப்பின்னாஸ் ஒருமுறை பூராவாயும்

இவ்வாறுகளை ஓதியபின்வருமாறு துஆவை தொழுகையாவும் முடிந்தபின் ஐங்காலங்களிலும் ஓதலாம்.

(1) அல்லாஹும்ம

எல்லா உலகங்களையும் உயிர்களையும் சிருஷ்டித்து காத்து இரட்சிக்கும்படியான நாயனே

(2) இன்னா—மெய்யாக நாங்கள்

(3) நஸ்அலுக்க—உன்னிடத்தில் கேட்குகின்றோம்

[4] ஈமானன்முஸ்தக்கீமன்

செவ்வையான ஈமானென்ற நிண்ணயத்தையும்

[5] வபலுலன்தாயிமன்—நேமமானவரிசையையும்

[6] வநஹுறன்றஹ்மத்தன்— கிருபையாகியபார்வையும்

[7] வஇல்மன்நாபிஅன்

பலன் கொடுக்கும்படியான அறிவையும்

(8) வஅக்லன் காமிலன்—நிறைந்த புத்தியையும்

(9) வகல்பன்முநவ்வறன்—பிரகாசமான ஹிருதயத்தையும்

[10] வதவ்பீக்கன்இஹ்ஸானன்

உபகாரமான நேர்வழிக்கட்டளையையும்

[11] வதவ்பத்தன்நஸூஹன்

கலப்பறுதலான மன்னிப்பையும்

[12] வஸபுரன்ஜமீலன்— அழகான பொறுமையையும்

[13] வஅஜுறன்அலீமன்—உயர்தரமான கூலியையும்

(14) வலிஸானன்தாக்கிறன்

திக்று செய்யும்படியான அதாவது தோத்திரம் செய்யும்படியான நாவையும்

(15) வபதனன்ஸாபிறன்

இன்பம் துன்பம் இரண்டிலும் பொறுமை செய்யும் படியான ஸ்தூலத்தையும்

(16) வறிஸ்க்கன்வாஸிஅன்

விஸ்தீரணமான ஆகாரத்தையும்

(17) வஸயியன்மஷ்க்கூறன்

ஒப்புக்கொள்ளப்பட்ட முயற்சியும்

(18) வதன்பன்மஹ்பூறன்

பாவத்தை பொறுக்கப்படுவதையும்

(19) வஅமலன்மக்பூலன்

ஒப்புக்கொள்ளப்பட்ட வணக்கத்தையும்

(20) வதுஆஅன்முஸ்தஜாபன்

ஒப்புக்கொள்ளப்பட்ட வேண்டலையும்

(21) வஜன்னத்தல்பிறுதவ்ஸிநயீமன்

சுகமாகிய பிறுதவ்ஸென்னும் சுவர்க்கத்தையும் உன்னிடம் கேட்டு விரும்புகின்றோம்

(22) பிறஹ்மத்திக்க

உன் கிருபைகொண்டு

(23) யாஅற்ஹமற்—றாஹிமீன்

கிருபை செய்கிற யாவற்றிராள்களிலும் மேலான கிருபை செய்கின்றவனே

(24) வஸல்லல்லாஹு—வத்தஆலா— வஸல்லம்—அலாகைறி கல்க்கிஹி—ஸய்யிதினா முஹம்மதின்

நமக்கெல்லாம் நாயகமாயும் சர்வ வஸ்துக்களைவிட அதிமேலான முஹம்மதெனும் திருநாமத்துடையவர்கள் மீதும்

(25) வஆலிஹி—வஸஹ்பிஹி—அஜ்மயீன்

இன்னும் அவர்கள் கிளைகோத்திரத்தார்கள் தோழர்கள்முமினான அதாவது விசுவாசர்களான சர்வ ஆண் பெண்கள் மீதும் உயர்த்தியான நாயன் கிருபையும் ஈடேற்றமும் சொல்வானாக

(26) ஸுப்ஹான றப்பிக்க றப்பில்—இஸ்ஸத்தி அம்மா யஸிபூன்

விக்கிரக ஆராதனையுடையவர் வர்ணித்து கூறும் நாயனும் நிகரொன்றாத சுத்த சம்பூரணனான அல்லாஹுத்தஆலாவை துதி செய்கின்றோம்

(27) வஸலாமுன்—அலல் முர்ஸலீன

ஈடேற்றமாவது நாயனின் தூதர்கள் மீதாயிருக்கும்

(28) வல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன்

புகழ் அடங்கலும் ஆலத்துடைய அதாவது உலகத்துடைய யாவற்றினையும் வளர்க்கும் நாயனுக்காயிருக்கும்

## உலுவின் பர்லுகள் (4)

(1) முகத்தில் நெற்றி ரோமம் உண்டாயிருக்கும் ஸ்தலத்திலிருந்து முன் புரமாய் நாடி அடிவரைக்கும் நீட்டத்தாலும் வலதுசெவியிலிருந்து இடது செவிவரை இருசென்னியுள்பட அகலத்தாலும் நன்றாய்த்தேய்த்து அலம்புதல்

(2) இருகர முழங்கைமேல் மொழியுள்பட தேய்த்து அலம்புதல்

(3) சிரசில் நாலிலொரு பங்கு ஜலத்தை தடவி மஸ்ஹு செய்யல்

(4) இரண்டு கரண்டைக்கால் மொழியுள்பட அலம்புதல்.

## உலுவின் ஸுன்னத்துகள் (14)

(1) அல்லாஹுத்தஆலாவின் ஏவலுக்கு அபிக்கப்பட்டு அசுத்தத்தில் நின்றும் சுத்தியாவதற்கு உலுச்செய்கின்றேனென நினைத்துக் கொள்ளல்

(2) பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம் சொல்லல்

(3) பிஸ்மில்லாஹில்அலீம் வல்ஹம்துலில்லாஹி அலா தீனில்இஸ்லாம் சொல்லல்

(4) இரண்டு மணிக்கட்டுவரை ஜலத்தால் தேய்த்து கையை அலம்பல்

(5) காருள்ள மரத்தின் குச்சியைக்கொண்டு ஜலத்தால் பல் விளக்கல்

(6) மூன்று விடுத்தம் ஜலத்தால் வாயை சுத்திகரித்தல்

(7) நாசியிரண்டிலும் மூன்று விடுத்தம் ஜலமேற்றிக் குடைந்து சுத்திகரித்தல்

(8) தாடி அடர்ந்திருப்பதை கோதி ஜலத்தால் அலம்பல்

(9) அலம்பப்பட்ட உருப்புகளை செவ்வையாய் மூன்று முறை ஜலத்தால் அலம்பல்

(10) கைகால்விரற்களை கோதி ஜலத்தால் சுத்தி செய்யல்

(11) சிரசு அடங்கலும் ஜலத்தால் மஸ்ஹு செய்பல் அதாவது ஜலத்தால் தடவி விடல்

(12) சிரசுக்கெடுத்த ஜலத்தால் இரண்டு செவிக்கும் மஸ்ஹு செய்யல்

(13) பர்லான உருப்புகளை இதிற்கூறியபிரகாரம் ஒழுங்காய் நடத்தல்

(14) உருப்புகள் உலரமுன் தொடராய்க்கொண்டு வரல்

உலுவின் முஸ்தஹப்புகள் அநேகமிருப்பதால் அவைகளிற் அவசியமானதிற் சிலவைகளைமட்டும் வரையலானது [13]

(1) கிப்லாவை முன்னோக்கல்

(2) சிரம் திறந்திருந்து உலுச்செய்யல்

[3] வலது உருப்புகளை முற்படுத்தல்

[4] இரண்டு புறங்கை கொண்டு கழுத்திற்கு மஸ்ஹு செய்யல்

[5] ஜலத்தை அதிகமாய் செலவு செய்யாதிருத்தல்

(6) அல்லாவுடைய நாமமெழுதிய மோதிரங்களை கழற்றிக் கொள்ளல்

(7) உலக வார்த்தைகளை அவசியமன்றி பேசாதிருத்தல்

[8] ஒவ்வொரு உருப்புகளை சுத்திகரிக்கும் காலத்தில் (பிஸ்மி பூராவும் ஸலவாத்தும் ஷஹாதத்கலிமாவுஞ் சொல்லல்)

[9] அந்தந்த உருப்புகளுக்கு ஏற்பட்டதை ஓதல்

[10] விரலிவிட்டிருக்கும் மோதிரங்களில் ஜலம் உள்ப்புகும்படி திருப்பிக்கொள்ளல்

[11] உலுச்செய்து முடிவானபின் கிப்லாவை முன்னோக்கி இருந்தாவது நின்றாவது உலுவின்மீத ஜலத்தை பருகல்

[12] இன்னாஅன்ஸல்னாஹு ஸூறாவை உலு முடிந்தபின் மூன்றுமுறை யோதல்

[13] உள்ளச்சமாய் உலுச்செய்யல்

## உலுவின் மக்றூஹுகள் (8)

[1] உலுச்செய்யும் எவ்வித உருப்புகளிலும் ஜலத்தால் அடித்தல்

(2) ஜலத்தை அதிகமாய்ச் செலவிடல்

(3) மூன்று முறைக்குமேல் உருப்புகளை சுத்திகரித்தல்

(4) மூன்று முறைக்கு குறைவாய் உருப்புகளை சுத்திகரித்தல்

(5) மஸ்ஹு செய்யப்பட்ட உருப்புகளை புதிய ஜலங்கொண்டு மூன்று முறை மஸ்ஹு செய்யல்

(6) அசங்கியமுள்ள இடத்தில் உலுச்செய்யல்

[7) ஸ்திரியள் உலுச்செய்த மீதி ஜலத்தைக் கொண்டு புருஷர்கள் உலுச்செய்யல்

(8) பள்ளிக்குள் ஜலம் சிந்தும்படி உலுச்செய்யல்

## உலுவின் முறித்தல்கள் (12)

1. முன்பின்னை துவாரங்களிலிருந்து யாதொரு வஸ்துக்கள் வெளியானாலும்

2. ஸ்தூலத்தில் இரத்தம் சீழ்ஜலம் வெளிப்பட்டு அந்தஸ்தலம்விட்டு வழிந்தோடிச் சென்றாலும்

3. வாய் நிறைய சத்தியெடுத்தாலும்

4. படுத்து அல்லது ஒருவஸ்து விற்பலமாய்ச் சாய்ந்து நித்திரை செய்தாலும்

5. மதி கேடான பயித்தியம் பிடித்தாலும்

6. போதக்கேடானாலும்

7. யாதொரு வஸ்துவை உள்க்கொண்டு வெறியானாலும்

8. ருக்கூஸஜ்தாவுடைய தொழுகையிற்பாலிக்கென்ற பிர விடையானவர்கள் உரத்த சிரிப்பாய் சிரித்தாலும்

9. ஆடவரும் மனைவியும் இருவரின் வெட்கஸ்தலம் திரையன்றி புசும்புதலுடனே ஒன்றோடொன்று உரசும்படி சந்தித்தாலும்

10. ஆணுமாணும் இருவரின் வெட்கஸ்தலம் ஒன்றோடொன்று உசும்புதலுடனே சந்தித்தாலும்

11. பெண்ணும் பெண்ணும் இருவரின் வெட்கஸ்தலம் ஒன்றோடொன்று சந்தித்தாலும்

12. சரீரத்தில் பெரியஉண்ணியாவது அட்டையாவது கடித்து வழிந்தோடும் இரத்தத்தை பருகினாலும்

## உளு முறியாதவைகள் (9)

(1) முன்துவாரத்தில் மட்டும் காற்று வெளிப்பட்டாலும்

(2) செவி—நாசி—வாய் இவைகளிற் காயங்கள் பட்ட இடமிருந்து புழுவெளியானாலும்

(3) சிறு குழந்தைகள் தொழுகையி லிருக்கும்பொழுது உரத்த சிரிப்பாய் சிரித்தாலும்

(4) பாலிக்கான வன்ஜனஸாத் தொழுகையிற் உரத்த சிரிப்பாய் சிரித்தாலும்

(5) கொஞ்சம் ஒக்காளமெடுத்தாலும்

(6) வாய்நிறைய காரலாய் சத்தி எடுத்தாலும்

(7) சாயாமல் நித்திரை செய்யும்பொழுது ஒரு வஸ்துவில் விழுந்து தரிபடு முன்னெழும்பினாலும்

(8) வெட்க ஸ்தலத்தை தொட்டாலும்

(9) பெண்பிள்ளையைத் தொட்டாலும்

## உளுவில்லாதிருப்பவர்கள் (மூன்று) செய்கை செய்வது ஹறுமான விலக்கல்.

அவையாவன.

1. உறையில்லாமல் குர்ஆனைத்தொடல்.

2. தொழுதல்.

3. கஃபாவைச்சுற்றி தவாபு செய்யல்

அதாவது பிரதக்கணம் வலம்சுற்றி வருதல்.

## சொந்த ஸ்திரி புருஷர்.

## சங்கமமென்ற புணர்ச்சியின் பின் முழுகல்விஷயத்தில் பர்ளு. (3)

1. ஜலத்தால் வாய் கொப்புளித்தல்.

2. ஜலத்தை நாசியில்ச் செலுத்திச் சிந்துதல்.

3. தேகமுழுதும் ஒருமுறை ஜலத்தைச் சொரிதல்.

## சுன்னத்து (7)

1. நிய்யத்து இதன் 6-வது பக்கம் 2-வது லக்கத்தில் விபரங்கூறியபடி மொழிந்து அர்த்தத்தையும் அறிந்து கொள்ளல்.

2. பிஸ்மில்லா பூராவும் சொல்லிக்கொள்ளல்.

3. இரண்டு கை மணிக்கட்டுவரை தேய்த்து அலம்பிக் கொள்ளல்.

4. குய்யமான வெட்க ஸ்தலத்தை சுத்திகரித்துக் கொள்ளல்.

5. சரீரத்திலும் உடைகளிலும் அசங்கியம் பட்டிருந்தால் சுத்திகரித்துக்கொள்ளல்.

6. தொழுகைக்கு உளுச்செய்வதுபோல செய்து கொள்ளல்.

7. சிரசில் மும்முறை. வலது தோளில் மும்முறை, இடது தோளில் மும்முறை, சரீரம் அடங்கலிலும் மும்முறை இவ்வாறாக ஜலம் வார்த்து சுத்திகரித்துக்கொள்ளல்.

ஸ்திரி புருஷர் இருவர்களின் சேர்க்கையில் சினமென்ற

ஆண்குறியானது உபஸ்தமென்ற பெண்குறியில் செலுத்தப்பட்டு நுத்பாவென்ற நாதமான இந்திரியம் இறங்கினாலும் இறங்காவிட்டாலும் முழுகல் விதியாயின

விதியான முழுகலை தாமதமன்றி உடனே கழித்துவிடவும் அவ்வாறன்றி பிற்படுத்தி ஒருநாளளவு தாமதப்படுபவரின்பேரில் இப்புவனத்திலுள்ள வஸ்துக்கள் யாவும் *லஃனத்துடன்பது ஆச் செய்தலோடு இன்னும் அன்னோரின் பொருட்களில் பறக்கத்தான நயவிருத்தியை நாயனெடுத்துவிடுவான்.

அவன் கபுரைவிட்டு எழும்பும்போது துர்கந்தமான நாற்றம் மஃஷர் மைதானத்திலுண்டாகும் அங்கிருக்கும் மற்றவர்கள் இந்த துர்வாடை யாதென்று கேட்பார்கள் அப்பொழுது மலக்குகள் சேர்க்கை முழுகலை பிற்படுத்தி ஒரு நாளளவு தாமதித்து நடத்தினோரின் நாற்றமென பகர்ந்தவுடனே நாயனே இந்தக் கேடுடையவர்களை விட்டும் எங்களைக் காப்பாற்றென்று வேண்டிக் கேட்கவும் அப்பொழுது அன்னோரை நரகத்திற்குக் கொண்டு போய் அவையிலுள்ள (மாவுல்ஹமீமென்ற) ஊன் வெந்நீரில் குளிப்பாட்டுங்களென்று உத்தரவாகும் அவ்வாறு மலக்குகள் நடத்திவைப்பார்கள். (ஹதீது)

இயாராவது ஒருவர் முட்டுமறைய உடுபுடவையன்றி குளித்தால் (நாற்பது வருடம்) செய்த நல்ல அமல்களை அல்லாஹுத்த ஆலா அழித்துவிடுவானென்று நமது அருமை நாயகமவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்களென (றயாகீனுல் அகியா) வென்ற கித்தாபில் வருகின்றன.

## ஹிக்காயத்து.

இப்பானுல் புஜிலி அவர்கள் சொல்லுகின்றதாவது தங்கள் வீட்டின் அடுத்த வீட்டார் மரணித்து மையத்தை கபுறுக்குள் வைக்குங்கால் பூனையைப்போல ஒரு மிருகம் இருக்கக் கண்டு அதை வெருட்டிப் பார்த்ததில் போகாதிருந்தமை கண்டு மண்வெட்டியால் அடித்துப்பார்த்தும் நகளாதிருந்தபடியால் மற்றொரு

* லஃனத்துடன் பதுஆ — சாப அறிக்கையிடல்.

கபுறு வெட்டி அங்கும் மையத்தைக்கொண்டு வைக்கவும் முன் போல ஒரு மிருகம் அங்கிருக்கக் கண்டு அதையும் வெருட்டிப் பார்த்ததிலும் போகாததினால் அவர் விதிப்பயனென்று அதிலே அடக்கப்பட்டு மண்ணைமூடி முடியவும் அம்மனிதனின் எலும்பு முறிபடுகின்ற ஒலி கேட்டது நாங்கள் பயமும் மன வருத்தமும் அடைந்தவர்களாய் அவர் மனைவியிடம் விஷயத்தை அறிவித்து அவர் காரியாதியை விசாரித்ததில் அவள்கூறினதாவது (பர்லான) குசுல் முழுகலை பிற்படுத்தி பிற்படுத்தி தீர்ப்பார் என்றனள்.

இதற்காகத்தான் ரூபமெழுதப்பட்ட வீட்டிலும் நாயிருக்கிற வீட்டிலும், முழுக்காளியிருக்கிற வீட்டிலும் றஹமத்துக்கொண்டு வருகின்ற மலக்குகள் வரமாட்டார்களென்றும் முழுகலில் எவ ராவது ஒரு மனிதன் ஒரு உரோமப் பிரமாணம் சுத்தி செய்யா விட்டு விட்டால் அநேக அநேக விதமான அதாபுகள்அடைவா ரெனவும் நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினார்கள்.

## தொழுகையில் பர்லுகள்.

நிலையில்

1. தொழுகையின் நேரத்தில் தொழுக ஆரம்பித்தல்
2. உடல் சுத்தமாயிருத்தல்
3. உடை சுத்தமாயிருத்தல்
4. இடம் சுத்தமாயிருத்தல்
5. திரேகத்தை மறைத்தல்
6. முகம் கிப்லாவின் நேர் நோக்கல்
7. கியாம் நிற்கல்
8. மனதில் நிய்யத்துச் செய்யல்

அதாவது நவைத்துஅன்உசல்லியவில்லாஹி தஆ லாவிலிருந்து ஆரம்பித்து முடிவுவரை கூறி முகித்தலும் இன்றும் இன்னின்ன காலத்தின் இன்னின்ன தொழுகையின் றக்அத்தை அல்லாவுக்காக தொழுகின்றேனென்று கூறலுமாம்

9. முதல் தக்பீர் கூறல்
10. குர்ஆன் ஓதுதல்

## குனிதலில்

1. றுக்கூவு செய்தல்

## சிரம்பணிதலில்.

2. ஸஜ்தாச் செய்பல்

## இருப்பு இருக்கலில்.

1. தொழுகையின் முடிவில் உட்காருதல்
2. முறைபாய்த்தொழுதல்
3. தொழுகையிலிருந்து வெளியாகல்

## அறிதல்.

1. நிலையில் (10)
2. றுக்கூவில் (1)
3. ஸஜ்தாவில் (1)
4. இருப்பு இருக்கலில் (3)

ஆக நான்கு வகையாலும் பதினைந்து பர்லின் விபரமுணர்க.

## தொழுகையில் வாஜிபுகள்.

### நிலையில்

1. முதல் தக்பீரில் அல்லாஹு வென்ற வார்த்தையோடு அக்பரென்ற வார்த்தையைச் சேர்த்து மொழிதல்

2. பர்லுத் தொழுகையில் முதலிரண்டு றக்அத்திற்கும் அல்ஹம்து சூறு ஓதல்

3. இதனை ஒவ்வொரு முறையும் குர்ஆன் ஓதுவதற்குமுன் ஓதல்.

4. இதனுடன் குர்ஆனின் ஒரு சூறவை அல்லது ஒரு பெரிய ஆயத்தை அல்லது சிறிய மூன்று ஆயத்துகளை சேர்த்தோதல்.

5. பர்லுக் தொழுகையில் முன்னே இரண்டு றக்அத்து களில் குர்ஆன் ஓதல்.

6. வித்றுத் தொழுகையில் குனூத்து ஓதல்.

7. இரண்டு பெருநாளென்ற ஈதுக்களில் தக்பீர்கள் சொல்லல்.

8. அவற்றின் இரண்டாவது றுக்கூவின் தக்பீர்கள் சொல்லல்.

9. ஸஜ்தாதிலாவத்து செய்தல்.

10. மெதுவா யோதவேண்டிய இடங்களிற் மெதுவா யோதல்.

11. இறைந்து ஓதவேண்டிய இடங்களிற் இமாமானவர் இறைந்தோதல்.

12. முக்ததி மௌனமாயிருத்தல்.

13. இமாமானவர் எச்சமயத்தில் எச்செய்கையிலிருக்கின்றாரோ அச்செய்கையிலே அவரைப் பின்துடர்ந்து செய்தல்,

## றுக்கூவில்.

1. குனிந்து நிற்றல்.
2. தஸ்பீஹிற்குச் சரியான நேரம்வரை தாமதித்திருத்தல்.
3. அவைபிலிருந்து எழும்பல்.

## ஸஜ்தாவில்.

1. பூமியிற் சிரம் வைத்தல்.
2. தஸ்பீஹிற்குச் சரியான நேரம்வரை தாமதித்திருத்தல்.
3. அவையிலிருந்து எழும்பல்.

## இருப்பில்.

(1) முதல் இருப்பு இருத்தல்.

(2) முன்னிருப்பு கடையிருப்பு இவ்விரண்டிலும் அத்தஹிய்யாத்தை ஓதல்.

(3) ஸஜ்தாஸஹு செய்யல்.

(4) ஒவ்வொரு பர்ளையும் அதனின் ஸ்தானத்தில் நிறைவேற்றல்.

(5) ஒவ்வொரு வாஜிபையும் மேற்கண்டபடி செய்யல்.

(6) ஸலாம் என்னும் வார்த்தை மொழிதல்.

## அறிதல்.

1. நிலையில் (13)
2. றுக்கூவில் (3)
3. ஸஜ்தாவில் (3)
4. இருப்பில் (6)

ஆக நான்கு வகையாலும் (25) வாஜிபு விபரமுணர்க.

## கவனிப்பு.

### ஸஜ்தா திலாவத்தென்பது

ஸஜ்தாவுடைய ஆயத்து ஓதும்படி வந்தால்உடனே றுக்கூவுக்குச் செல்லாமல் ஓர் ஸஜ்தாமட்டுஞ் செய்து தஸ்பீஹ் மும்முறை ஓதி நிலைக்கிஇமாமானாலும் முக்ததியானாலுமே வந்துவிட வேண்டும்.

### ஸஜ்தாஸஹூவென்பது

மேல்க்கூறிய வாஜிபுகளில் ஒன்றையேனும் தெரிந்துவிட்டு விட்டால் தொழுகையைத் திருப்பித்தொழவேண்டியது வாஜிபு மறந்துவிட்டு விட்டால் ஸஜ்தாஸஹூவு செய்யவேண்டியது.

அவை எவ்வாறெனில் தொழுகை முடிவில் அத்தஹிய்யாத்தை ஆரம்பித்து அப்துஹூவறஸூலுஹூவரை ஓதிமுடித்து வலப்புயம் நோக்கி சலாம் உறைத்து இரண்டு ஸஜ்தாச்செய்து அப்பால் அதே இருப்பிருந்து பூரா அத்தஹிய்யாத்தை ஓதி முடித்து இருபுயப்பக்கமும் சலா முறைப்பதே.

## தொழுகையில் சுன்னத்துகள்.

### நிலையில்

(1) எந்தத் தொழுகையிலும் முதல்தக்பீர் கட்டும்போது கையை உயர்த்தி இரு சிறுசோணையில் இரண்டு பெருவிரலால் தொடுவது

(2) வாஜிபுல்வித்று தொழுகையில் குனூத்து ஓதப்போகையிலும் மேற்கூறியவாறு நடத்தல்.

(3) பெருநாட்களின் தொழுகையிலும் அவ்வாறு நடத்தல்.

(4) இந்த சந்தர்ப்பத்திற் கைவிரற்களை சற்று அகட்டிக் கொள்ளல்.

(5) இமாமானவர் தக்பீரை இறைந்து சொல்லலும்முக்ததிகளும் தனித்து தொழுபவர்களும் மெள்ளக்கூறல்.

(6) இடது கரத்தின்மீது வலது கரத்தை வைத்துக்கட்டல்

(7) தனா ஓதல்.

(8) அஊது ஓதல்.

(9) பிஸ்மி ஓதல்.

(10) வாய்க்குள் இவைகளை மெதுவாயோதல்.

(11) வாய்க்குள் ஆமீன் மெதுவாய்க்கூறல்.

## றுக்கூவு குனிதலில்

(1) முழங்காலைப்பிடித்தல்.

(2) அப்போது கைவிரற்களைச் சற்று அகட்டி வைத்தல்.

(3) இவையில் தஸ்பீஹை மூன்று முறை கூறல்.

(4) இமாமானவர் ஸமியல்லாஹுலிமன் ஹமிதாவை பூருக்கூறல்.

(5) முக்ததிகள் அல்லாஹும்ம றப்பனா —வ— லக்கல்ஹம்து என சுமாராய் உரத்துக்கூறி இமாமும் முக்ததிகளும் நிமிர்ந்து சிறு நிலை நிற்பது.

(6) தனித்துத் தொழுபவர்கள் மேற்கண்ட இரண்டையும் கூறல்.

## சிறு நிலை

[1] இதில் தாமதித்தல்

[2] இதிலிருந்து ஸஜ்தாவுக்கு போவதில் தக்பீர் கூறல்

## ஸஜ்தா சிரம் பூமியில் வைத்தல்.

[1] இதில் (7) உறுப்புகளிலும் பாரத்தை சமநிலை பெறச் செய்யல்.

[2] இதில் தக்பீர் கூறல்.

[3] இதில் தஸ்பீஹை மூன்று முறை மொழிதல்.

## சிறு இருப்பு.

[1] இதில் தாமதித்தல்.

(2) இதில் தக்பீர் கூறல்.

## பெரு மிருப்பு.

(1) ஆண்கள் வலது காலை நிறுத்தி வைத்து இடது காலை கீழே கிடத்தாட்டி வைத்தல்.

(2) பெண்கள் வலது இடது காலிரண்டையும் வலப்பக்கம் விட்டு வைத்தல்.

(3) சலாம் (சொல்லி) அதாவது சலாம் கூறிக்கொண்டு இரண்டு பக்கமும் முகத்தை திருப்புதல்.

(4) ஒவ்வொரு விஷயத்திலும் இமாமின் உடன் தயர்ந்து செய்தலில் அவர்களுக்கு முந்தியும் சமாசமாயுமில்லாது பின் துடர்ந்து செய்தல்.

(5) தொழுகையில் சலவாத்து துஆ ஆகியவைகளையோதல்.

## அறிதல்.

1. நிலையில் (11)
2. றுக்கூவில் (6)
3. சிருநிலையில் (2)
4. ஸஜ்தாவில் (3)
5. சிறு இருப்பில் (2)
6 பெருமிருப்பில் (5)

ஆக ஆறுவகையாலும் (29) சுன்னத்து விபர முணர்க.

## தொழுகையில் முஸ்தஹறுபுகள்.

### நிலையில்.

1. தக்பீர் கட்ட ஆரம்பிக்கும்போது ஆண்கள் மேனியின் மேல் உடுப்பு அணிந்திருப்பதில் முன்கைபடத்தை மூடிக்கொண் டிருப்பதாயிருந்தால் அதை மணிக்கட்டுக்குமேல் உயர்த்திக் கொள்ளல்.

2. பெண்களுக்கும் அவ்வாறே.

3. மௌஜன் கத்காமத்திஸ்ஸலாத்தென்றவுடனே இமாம் தக்பீர் கட்ட ஆரம்பித்தல்.

4. அல்லாஹூவென்ற வார்த்தையுடனே இரு கரமுயர்த்தி அக்குபரென்ற வார்த்தையுடனே தொப்புளின் கீழ் தக்பீர் கட்டிக் கொள்ளல்.

5. பெண்கள் தோள்வரையுந்தூக்கி மாருக்குச் சரியாய்க் கட்டிக் கொள்ளல்.

6. தக்பீரில் மிகவுந் தாழ்மையுடனே அல்லாஹூவின் பெருமையை நினைப்புக்கொள்ளல்.

7. அல்லாஹூ என்றதில் (லாமை) பூரணமாய்ச் சொல்லல்

8. அக்குபர் என்ற கடாசி (றேயை) குறுகுதலாய்ச் சொல்லல்.

9. ஸஜ்தாஸ் தலபார்வையாக நிற்றல்.

10. இருகாலும் நான்கு அங்குலத்திற்கு குறைபடாமலும் ஒரு தேங்காய் உருட்டுக்கு மேல் போகாமலும் அகற்றுதல் கொண்டு நிற்றல்.

11. கிருஅத்தென்ற குர்ஆன் ஓதலில் சிறிய ஆயத்து மூன்றுக்கு மேல் ஓதல்.

12. ஆயத்துக்களை அரபியின் காயிதாப்படி ஓதல்.

13. ஓதலில் பொருள் விளங்கியவர்கள் அவ்விளக்கத்தின் பேரில் கியானமும் விளங்காதார் ஓதலின்பேரில் கியானமிருப்பது

14. பறுலுத் தொழுகையில் பிந்தின ஒன்றிரண்டு றக்அத்களில் அல்ஹம்து ஓதல்.

15. எல்லா றக்அத்துகளிலும் அல்ஹம்துக்குப்பின் பிஸ்மில்லாவை ஓதல்.

16. தொழுகையில் யாதொன்றை ஓதும்பொழுது இருமல் கொட்டாவி வருபவையை அடக்கல்.

## றுக்கூவில்.

1. குனிந்து சிரசும் புட்டியும் தராசைப்போல சமமாய் நிற்றல்.

2. இவ்வாறு நிற்பதில் பார்வைகால்களின் படத்திலிருக்கல்

3. தனித்து தொழுபவர் தஸ்பீஃ மூன்றுக்குமேல் ஒற்றை படக்கூறல்.

4. ஆண்களுக்கு தொழுகையில் விலாவும் கைப்பட்டையும் விலக இருத்தல்.

5. பெண்களுக்கு தொழுகையில் அவைநெருங்க இருத்தல்.

## சிறு நிலையில்.

1. கைகளை தொங்கவிடல்.

## ஸஜ்தாவில்.

1. போகும்பொழுது (1) முழங்காலிரண்டையும் 2. முட்டிரண்டையும் 3. கையிரண்டையும் 4. நாசியையும் 5. நெற்றியையும் பூமியில் வைத்தல்.

2. எடுக்கும்பொழுது 1. நெற்றியையும் 2 நாசியையும் 3. கைகளையும் 4. முட்டுகளையும் 5. முழங்கால்களையும் பூமியிலிருந்து எடுத்தல்.

3. ஆண்களுக்கு வயிறு தொடையிற்படாமலும் பின் தொடை பின் கெண்டைக்காலிற் படாமலும் முன் கெண்டைக் கால் பூமியிற் படாமலும் கைப்பட்டை விலாவிற் படாமலும் நன்ருய் விலக இருத்தல்.

4. பெண்களுக்கு அவையெல்லாம் நெருங்க இருத்தல்.

5. பூமியிற் கைவிரற்கள் பொருந்த வைத்தல்.

6. இருகையும் முகத்திற்கு சரியாய் வைத்தல்.

7. விரற்கள் கிபுலாவுக்குச் சரியாயிருத்தல்.

8. நாசியும் நெற்றியும் பூமியின்மேற்பட வைத்தல்.

9. கண்பார்வை நாசிக்கு சரியாயிருத்தல்.

10. கால்விரற்களை பூமியில் நிறுத்தியிருத்தல்.

11. அந்த விரற்கள் கிபுலாவுக்கு நேர் வளைந்திருத்தல்.

12. மூன்று தஸ்பீஹ்க்குமேல் தனித்து தொழுபவர் ஒற்றைபடக்கூறல்.

## இருப்பில்.

(1) இருப்பில் இருகரத்தையும் இருதொடைகள்மேல் வைத்தல்.

(2) விரற்கள் நுனி முழங்கால்கள் மேலிருத்தல்.

(3) அவ்விரற்கள் தொடையின்மேல் கிபுலாவுக்கு சரியாயிருத்தல்.

(4) அவைகள் வழக்கப்பிரகாரம் விரித்தல் போலிருத்தல்

(5) பார்வை மடியின்மேலிருத்தல்-

(6) கால்களைத் துணியால் மறைத்திருத்தல்.

(7) பாக்கியிருக்கிற தொழுகைக்காரர்கள் இமாம் இருபுறமும் சலாம் கொடுக்கிறவரையும் தாமதித்திருத்தல்.

(8) அவ்வாறு இருபுற சலாமில் கண்களின் வெள்ளைமுழிபுரள தன் தோள்களைப் பார்த்தல்.

(9) இமாமானவர்கள் அந்தசலாமான துமுக்த்ததிகளுக்கும் கிருமன் காத்தியின் மலக்குகளுக்குமென்று நிய்யத்துச் செய்யல்.

(10) முக்த்ததிகள் இமாமுக்கும் ஜமாஅத்துகளுக்கும் அம்மலக்குகளுக்குமென நிய்யத்துச் செய்யல்.

[11] தனியாகத் தொழுபவர் அம்மலக்குகளுக்கேயென நிய்யத்துச் செய்யல்.

[12] இமாமானவர்கள் முந்திய சலாத்தை இரைதலாயும் பிந்திய சலாத்தை அமைதியாயுங் கூறல்.

## அறிதல்.

1. நிலையில் [16]

2. ருக்கூவில் (5)

3. சிறு நிலையில் (1)
4. ஸஜ்தாவில் (12)
5. இருப்பில் (12)

ஆக ஐந்து வகையாலும் (46) முஸ்தஹபு விபரமுணர்க.

## தொழுகையில் முபாகுகள்.

### நிலையில்.

1. நபில் தொழுகையில் ஓர் றக்அத்தில் ஓர் சூறாவை இரண்டு முறை திரும்பத் திரும்ப ஓதலாம்.

2. ஷை தொழுகையில் ஓர் றக்அத்திற்கு ஓர் சூறாவின் கடாசியும் மற்றொரு றக்அத்திற்கு மற்றொரு சூறாவின் கடாசியும் ஓதலாம்.

3. எல்லாத் தொழுகையிலும் சிறு நிலையிலிருந்து ஸஜ்தாவுக்கு போகும்பொழுது இடுப்பிலிருக்கும் இஜார் அல்லது லுங்கி இவைகள் முழங்காலில் இருக்கமாயிருந்து கிழிந்து போகும்படியாயிருந்தால் கையால் உயர்த்திக்கொள்கலாம்.

### ஸஜ்தாவில்.

1. ஸஜ்தா ஸ்தலத்தில் கல்லு செத்தை முதலானவைகளிருந்தால் அவையை ஓர் முறை துடைத்து விடலாம்.

2. ஸஜ்தா ஸ்தலத்தில் ஷர்ப்பம் தேள் முதலிய விஷ ஜெந்துக்களைக் கண்டால் தொழுகையை நிறுத்திக்கொண்டு அவைகளை கொன்று அப்புறப்படுத்தி விட்டு தொழுகையை விட்டதிலிருந்து தொழுதுக் கொள்க்லாம்.

3. ஸஜ்தா ஸ்தலம் பிசகி அப்பால் தெரியலானால் சரியான ஸஜ்தாஸ்தலத்திற்கு அப்படியே நெற்றியை நகர்த்திக்கொள்கலாம்

4. இமாமுக்கு தொழுகை முடிந்ததோ அல்லதின்னமுமிருக்கின்றதோவென்ற சந்தேக மேற்பட்டால் கடாசி ஸஜ்தாவிலிருந்து எழும்பப் போகும்பொழுது கடைக் கண்ணால் ஜமாஅத்தைப் பார்க்கவேண்டும் அவர்கள் எழும்பும்படியாயிருந்தால்த் தானும் எழுந்துக் கொள்கலாம் இருக்கும்படியாயிருந்தால் தானுமிருந்து விடலாம்.

## இருப்பில்:

(1) தொழுகையிலிருக்கும்பொழுது மனதில் யாதொருசந்தேகமுற்று பயங்கரங்கொள்ள ஏற்படுமாயின் அவை நீங்கமுகத்தைத் திருப்பாமற் கடைக் கண்ணாலவை எவை யெனப் பார்க்கலாம்.

(2) நபில்த் தொழுகையில் திரேக சவுக்கியமுள்ளவனும் சுவர் தூண்கள் முதலியதில் சாய்ந்து கொண்டும் தொழுகலாம்.

3. பர்ளு— வாஜிபு— சுன்னத்துத் தொழுகையிற் திரேக சவுக்கியமில்லாதவன் மேற்கூறல் பிரகாரம் தொழுகலாம்.

## பர்ளு—வாஜிபு—ஸுன்னத்து—நபில் இன்னான்கு விஷயத்தைப் பொருத்து.

1. தனியாத் தொழுமிடத்தில் திருடருடைய பயப்பாட்டால் தங்கம் வெள்ளி நாணயங்களையும் அவைபோல மற்றும் பொருள்களையும் உனுக்கெடாதிருக்குமாகில் அவையை வாயிற் போட்டு அடக்கிக் கொள்கலாம்.

2. அந்த வஸ்துக்களை கைவிரற்கள் மடங்காமல் உள்ளங் கையின் பிடிக்கி அடங்குவதாயிருந்தால் அதைகைக்குள் வைத்து கொள்கலாம்.

## அறிதல்.

1. நிலையில் (3)
2. ஸஜ்தாவில் (4)
3. இருப்பில் (3)
4. திருடர் விஷயம் (2)

ஆக நான்கு வகையாலும் (12) முபாகு விபரமுணர்க.

## தொழுகையின் மக்றூஹுகள்.

அவை அநேகமாயினும் அவசியப்பட்டவை

## நிலையில்.

1. சிரசில் ஒன்றும் தரித்துக்கொள்ளாது வெறுஞ் சிரசா யிருத்தல்.

2. சிரசின் உரோமத்தை உச்சியில்க் கட்டிக்கொள்ளல்.

3. தொழுகையில் ஆண்கள் குசும்பா வருணம் குங்கும வருணங்களான நூல் வஸ்திரங்களையும் பட்டு வஸ்திரங்களையும் அணிதல்.

4. மேல் அங்கிகளின் கட்டைக் கட்டாமலும் பொத்தான் களை மாட்டாமலும் விட்டுவிடல்.

5. வஸ்திரங்களை தோளின் மீதுஇட்டு இருபுரம் தொங்க விடல்.

6. ஒரு ஆயத்திலிருந்து அதற்கு முன்னுள்ள ஆயத்தை ஓதல்.

7. பர்லுத்தொழுகையில் ஒரு சூருவைஓதி பின்பு அதற்கு மேல் சூருவை ஓதல்.

8. நடுவில் ஒரு சூருவை விட்டு ஓதல்.

9. குர்ஆனை துரிதமாய் ஓதல்.

## குனிதலான றுக்கூவில்.

(1) றுக்கூஉ்செய்வதில் சிரசை முதுகிற்குமேலாக அல்லது கீழாக வைத்தல்.

## சிரம்பணிதலான ஸஜ்தாவில்.

(1) ஸஜ்தாச் செய்வதற்காக ஆரம்பத்தில் கரங்களை பூமி யின்மீது வைத்தல்.

(2) வயிற்றுடன் தொடையைச் சேர்த்தல்.

(3) ஸஜ்தாச் செய்யும்பொழுது முழங்கைகளைப் பூமியிற் சுமத்தி வைத்தல்.

(4) நெற்றியிலொட்டிய மண்ணைத் துடைத்தல்.

(5) ஸஜ்தா ஸ்தலத்திலுள்ள கற் சிறு மணிகளை அல்லது மண்களை நீக்கல்.

ஆனால் ஸஜ்தாச் செய்யக்கூடாமலான அவ்வளவதிகம் மேல்ப் படி வஸ்துக்களிருந்தால் அப்பொழுது விலக்கி விடலாம்.

இதில் மூன்று இபக்கத்திற்கு குறைவாயிருக்கவேண்டும்

(6) ஸஜ்தாவிலிருந்து எழும்பலில் ஆரம்பமாய் துடைகளை உயாத்தல்.

(7) மண்ணினின்றும் வஸ்திரங்களை காப்பாற்றல்.

## கிரியாம்சம் செய்யலில்.

(1) மேல் எதிர்பக்கம் ஆகிய இடங்களிற் ஜீவஜோற்ற உருவபடத்தை வைத்திருத்தல்.

மற்றக்காலங்களிலும் அவைகளிருக்கப்படா ஆனால் இவைகளன்றி பூங்கொடி முதலிய சித்திர வேலையுள்ளவைகளை வைத்திருப்பதினல் மக்றூஹு ஆகா.

(2) தலைப்பாகையின் சுற்றின்மீது ஸஜ்தாச் செய்யல்,

(3) கண்களை மூடிக்கொள்ளல்.

(4) அங்குமிங்கும் அண்ணாந்து பார்த்தலும். வானத்தைப் பார்த்தலும்.

(5) ஏதேனும் ஒன்றை முகத்தல் கொள்ளல்.

(6) கொட்டாவி விடும்பொழுது வாயை மூடாதிருத்தல்.

(7) சப்தமின்றி புன் சிரிப்புக்கொள்ளல்.

(8) விரற்களின் நெட்டை முறித்தல்.

(9) வலப்பக்கம் இடப்பக்கம் அசைதல்.

(10) சோம்பல் முறித்தல்.

(11) ஓர் தொழிலில் ஒன்று அல்லது இரண்டு இயக்கஞ் செய்தல்.

## இவைகளின் விபரம்.

| | | |
|---|---|---|
| 1. | கிலையில் | [9] |
| 2. | றுக்கூவில் | [1] |
| 3. | ஸஜ்தாவில் | [7] |
| 4. | கிரியாம்சத்தில் | [11] |

ஆக நான்கு வகையாலும் [28] மக்றூஹு விஷயமுணர்க.

## தொழுகையின் முறித்தல்கள்.

### சொல்லால்.

1. தொழுகையிலிருப்பவர் தெரிந்து பேசலாலும்
2. தொழுகையிலிருப்பவர் மறந்து பேசலாலும்
3. அவையை நடத்துபவர் ஸலாம் செய்யலாலும்
4. ஸலாம் செய்பவருக்கு மறுமொழி கூறலாலும்
5. சந்தோஷமான சமாசாரத்திற்கு பதில் சொல்லலாலும்
6. விசனமான சமாசாரத்திற்கு பதில்ச் சொல்லலாலும்
7. தும்மலிற்கு பிரதி சொல்லலாலும்
8. தன் இமாமைத்தவிர மற்றவரின் பிழை திருத்தலாலும்
9. குர்ஆனைப்பார்த்து ஓதினாலும்

### செயலால்.

1. உண்ணல் பருகல் கொஞ்சமாயினும் அல்லது சரியே யாயினும்

2. கொன்றைக்கடலையின் பிரமாணத்திற்கு சமமான பல் லொட்டியை விழுங்கினாலும்

3. உலகவிபத்தால் சத்தமிட்டழுதலாலும்
   ஆனால் சப்த்தமன்றி யழுதால் முறிவாகா

4. ஒஹ் (அல்லது) ஆஹ் (அல்லது) உக் உக் என மொழித லாலும்

5. தனக்கு கேட்கும்படி சிரித்தாலும்

6. நெற்றியை பூமியினின்றும் பிரத்தியேகமாய் வைத்தா லும்

7. இமாமுக்கு முந்தி நிற்குதலாலும்

8. பாதங்களை பூமியில் நின்றும் உயர்த்தினாலும்

9. ஒரு தொழிலில் மூன்று இயக்கம் செய்தலாலும்
   அவை எவையெனிற்—நிலை — றுக்கூவு—ஸஜ்தா சிறு நிலை சிறு இருப்பு ஆகியவைகள் போன்றதாம்

10. இமாமானவர் தன் முக்ததியைத் தவிர மற்றவர்களால் பிழை திருத்தப் பெற்றாலும்

### இவைகளின் விபரமாவன.

1. சொல்லால் (9)
2. செயலால் (10)

ஆக இருவகையாலும் (19) முறித்தல் விஷயமுணர்க.

முற்றிற்று.

# பிழை திருத்தம் அட்டவணை.

| பக். | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 1 | 5 | மணற் | மணல் |
| | 16 | கருபா | கஃபா |
| | 18 | ஏதிர் | எதிர் |
| | 25 | சாகை | ஜாகை |
| 2 | 19 | மணற் | மணல் |
| 3 | 19 | பாதகத்தை | பாதத்தை |
| | 21 | கருபா | கஃபா |
| 4 | 1 | சலாம் | ஸலாம் |
| 7 | 5 | உறையில்லாமற் | உறையில்லாமல் |
| | 10 | கஅபா | கஃபா |
| 8 | 7 | கஅபா | கஃபா |
| 9 | 5 | நஜிசை | நஜீஸை |
| | 7 | நஜிசாவது | நஜீஸாவது |
| | 11 | நஜிஸின் | நஜீஸின் |
| | 17 | நஜிஸு | நஜீஸு |
| 10 | 10 | நஜிஸு | நஜீஸு |
| | 12 | நஜீசாகா | நஜீஸாகா |
| | 15 | நஜிஸுக்காக | நஜீஸுக்காக |
| 12 | 5 | காபீர் | காபிர் |
| | 9 | மஸகு | மஸ்ஹு |
| 13 | 1 | மஸகு | மஸ்ஹு |
| | 5 | மஸகு | மஸ்ஹு |
| | 11 | சலவாத்தை | ஸலவாத்தை |
| | 18 | வரஸுலுஹு | வரஸூலுஹு |
| | 19 | சல்லல்லாஹு | ஸல்லல்லாஹு |
| | 20 | வசல்ல | வஸல்ல |
| | 22 | சலவாத் | ஸலவாத் |
| | 25 | சல்லல்லாஹு | ஸல்லல்லாஹு |
| | 26 | வசல்ல | வஸல்ல |
| | 27 | சலாமத் | ஸலாமத் |
| | 28 | மஸகு துடைத்தல் | மஸ்ஹு தடவுதல் |
| | 31 | சலாமத் | ஸலாமத் |
| 14 | 1 | தய்யமமு | தயம்மும் |
| | 8 | அத்தய்யம்மமு | அத்தயம்முமு |
| | 9 | தய்யம்மமு | தயம்முமு |
| 15 | 21 | இல்லாயில்லாகில் அலிமில் அலீம் | இல்லாயில்லாஹில் அலிய்யில் அலீம் |
| 16 | 12 | முஹம்மதர் றஸுலுல்லாஹ் | முஹம்மதற் றஸுலுல்லாஹ் |
| | 15 | முஹம்மது றசூலுல்லாஹிசல்லல்லாஹு | முஹம்மது றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு |

| பக். | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 16 | 16 | வசல்ல | வஸல்ல |
| 18 | 6 | முசாபர் | முஸாபிர் |
| | 7 | சுன்னத்து | ஸுன்னத்து |
| | 7 | முவக்கதா | முஅக்கதா |
| | 9 | சுன்னத்துமல்ல | ஸுன்னத்துமல்ல |
| | 18 | சலவாத்து | ஸலவாத்து |
| | 29 | முசாபர் | முஸாபிர் |
| | 29 | சுன்னத்து | ஸுன்னத்து |
| | 30 | முவக்கதா | முஅக்கதா |
| 19 | 2 | வசல்ல | வஸல்ல |
| | 4 | மஹ்மூதநில்லதி | மஹ்மூதநில்லதீ |
| | 15 | சுன்னத்துமுவக்கதா | ஸுன்னத்து முஅக்கதா |
| 20 | 11 | தலாதறக்குஅத்தின் | தலாதறக்குஆத்தின் |
| | 12 | அறுபஅறக்குஅத்தின் | அறுபஅறக்குஆத்தின் |
| | 16 | பறுளுஹாதல்வஹ்த்தி | பர்ளுஹா கல்வக்த்தி |
| | 19 | கருபத்திஷ் | கஃபத்திஷ் |
| | 20 | கருபத்துல்லா | கஃபத்துல்லா |
| 21 | 2 | கருபாவை | கஃபாவை |
| 22 | 11 | சுன்னத்து | ஸுன்னத்து |
| | 15 | தராவிஹ் | தராவீஹ் |
| | 19 | சூறுக்களை | ஸூறுக்களை |
| 23 | 4 | சுன்னத்து | ஸுன்னத்து |
| | 5 | சுன்னத்து | ஸுன்னத்து |
| | 11 | சுன்னத்து | ஸுன்னத்து |
| | 19 | சுன்னத்து | ஸுன்னத்து |
| | 20 | முஸ்தகபென்பதும் | முஸ்தஹபென்பதும் |
| 24 | 14 | மாலிக்கு | மாலிக்கி |
| | 24 | வலல்லாஅல்லீன் | வலல்லால்லீன் |
| 25 | 21 | இஸ்லாமியா | இஸ்லாமியர் |
| 26 | 16 | கருபா | கஃபா |
| | 18 | கருபாவை | கஃபாவை |
| | 19 | றசூல் | றஸூல் |
| 27 | 4 | காபீர் | காபிர் |
| | 26 | கருபாவின் | சஃபாவின் |
| | 27 | கருபாவின் | சஃபாவின் |
| | 31 | கருபாவின் | கஃபாவின் |
| 28 | 3 | கருபா | கஃபா |
| | 9 | காபீர் | காபிர் |
| | 17 | யத்திம | யத்தீம |
| 29 | 3 | சுப்யானும் | ஸுப்யானும் |

| பக். | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 29 | 5 | அபூசுப்யானும் | அபூஸுப்யானும் |
| | 13 | சக்காத்துங் | ஸக்காத்துங் |
| | 26 | காபீர் | காபிர் |
| 30 | 6 | பஷல்லி | பஸல்லி |
| | 12 | காபீரான | காபிரான |
| | 12 | ஆசூபின் | ஆஸூபின் |
| | 16 | ஆசூபின் | ஆஸூபின் |
| | 16 | கஅபாவின் | கஃபாவின் |
| | 17 | வாயினுள் | வாயலினுள் |
| | 28 | ஆசூபின் | ஆஸூபின் |
| 31 | 6 | காபீர் | காபிர் |
| 32 | 1 | ஆசு | ஆஸு |
| | 3 | ரசூல் | ரஸூல் |
| | 13 | காபீர் | காபிர் |
| 33 | 15 | காபீர் | காபிர் |
| 34 | 1 | பீஜ்கிகா | பீஜ்திஹா |
| | 4 | அலைஹிவஸல்லமவர்கன் | அலைஹிவஸல்லமவர்கள் |
| 35 | 15 | காபீர் | காபிர் |
| | 28 | காரணார்த்தம் | காரணார்த்தம் |
| 36 | 24 | காபீர் | காபிர் |
| | 31 | சுபுஹாவின் | ஸுபுஹாவின் |
| 37 | 14 | காபீர் | காபிர் |
| | 19 | பிறபின்னாஸ் | பிறப்பின்னாஸ் |
| 38 | 6 | ஓர் எகூதியின் | ஓர் எஹூதியீன் |
| | 7 | அஃசமுடைய | அஃஸமுடைய |
| | 29 | சூறு | ஸூறு |
| 39 | 8 | தஷ்பீஹா நேரம் | தஸ்பீஹா நேரம் |
| | 12 | ஹமீதஹா | ஹமிதஹா |
| | 18 | தஷ்பீஹாக்கு | தஸ்பீஹாக்கு |
| | 19 | தஷ்பீஹ | தஸ்பீஹ |
| | 24 | கஅபாத்திசை | கஃபாத்திசை |
| | 25 | நுணி | றுணி |
| 40 | 3 | தஷ்பீஹாக்கு | தஸ்பிஹாக்கு |
| | 4 | தஷ்பீஹா நேரம் | தஸ்பீஹா நேரம் |
| | 19 | அய்யுகன் | அய்யுஹன் |
| | 20 | வபற்ஹாத்துஹா | வபறஹாத்துஹா |
| | 23 | ஸாலீஹீன் | ஸாலிஹீன் |
| | 24 | ஸாலீஹீன்களான | ஸாலிஹீன்களான |
| | 29 | வசூஹுஹா | வஸூஹுஹா |
| 41 | 15 | இப்ருஹீம் | இப்ருஹீம |

| பக். | வரி | பிழை. | திருத்தம். |
| --- | --- | --- | --- |
| 41 | 23 | அல்லாஹும்மஃறபிர்வி | அல்லாஹும்மஃறபிர்லீ |
| | 29 | வலிஜமியில்முமினீன | வலிஜமீயில்முமீனீன |
| 42 | 9 | சலாம் | ஸலாம் |
| 43 | 5 | பிஷய்யீன் | பிஷய்யின் |
| | 5 | மின்இல்மிஹீ | மின்இல்மிஹி |
| | 21 | அன்தஸலாம் | அன்தஸ்ஸலாம் |
| | 28 | ஹய்யனு | ஹய்யினு |
| 44 | 4 | அலைத்த | ஆலைத்த |
| | 13 | வசல்லம் | வஸல்லம் |
| | 13 | அலாஹைறி | அலாகைறி |
| | 14 | ஹல்க்கிஹி | கல்க்கிஹி |
| | 22 | இஜ்ஜத்தி | இஸ்ஸத்தி |
| | 23 | யஸீபூன் | யஸிபூன் |
| | 24 | வர்ணித்து | வன்ணித்து—சிறப்பித்து |
| 46 | 10 | கதறின் | கத்றின் |
| 47 | 7 | அல்லாஹூ | அல்லாஹு |
| 50 | 12 | றப்புல்மலாயிக்கத்திவர்ருஹூ | றப்புல்மலாயிக்கத்திவற்றூஹி |
| | 14 | ஒதிமுடித்து | ஓதிமுடித்து |
| 60 | 26 | அன்உசல்லிய | அன்உஸல்லிய |
| 61 | 20 | சூறு | ஸூறு |
| | 23 | சூறுவை | ஸூறுவை |
| 63 | 20 | சலாம் | ஸலாம் |
| | 22 | சலாமுக்றப்பதே | ஸலாமுறைப்பதே |
| | 23 | சுன்னத்துகள் | ஸுன்னத்துகள் |
| 65 | 9 | சலாம் | ஸலாம் |
| | ,, | சலாம் | ஸலாம் |
| | 14 | சலவாத்து | ஸலவாத்து |
| | 22 | சுன்னத்து | ஸுன்னத்து |
| | 23 | முஸ்தஹபுகள் | முஸ்தஹப்புகள் |
| 66 | 2 | மௌஜன் | முஅத்தின் |
| 68 | 15 | சலாம் | ஸலாம் |
| | 16 | சலாமில் | ஸலாமில் |
| | 18 | அந்தசலாமானது | அந்த ஸலாமானது |
| | 24 | சலாத்தை | ஸலாத்தை |
| | 25 | சலாத்தை | ஸலாத்தை |
| 69 | 4 | முஸ்தஹபு | முஸ்தஹப்பு |
| | 5 | முபாகுகள் | முபாஹுகள் |
| | 7 | சூறுவை | ஸூறுவை |
| | 9 | சூறுவின் | ஸூறுவின் |
| | 10 | சூறுவின் | ஸூறுவின் |

| பக். | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 70 | 8 | சுன்னத்துத் | ஸுன்னத்துத் |
| | 24 | முபாகு | முபாஹு |
| 71 | 16 | சூருவை | ஸூருவை |

இதில் விடுபட்டவைகள்.

| | | | |
|---|---|---|---|
| 15 | 26 | தக்கவராய் | தக்கவாராய் |
| 16 | 14 | சொல்லிக்கொள்ளவேண்டு | சொல்லிக்கொள்ளவேண்டும் |
| 23 | 20 | முஸ்தகபென்பதும் | முஸ்தஹபென்பது |
| 37 | 2 | தீங்கைவிட்டு | தீங்கைவிட்டும் |

பக். 43. வரி 12-ல் விலாசமாகும் | விசர்லயமாகும்

# அங்கோரா சுகந்த மூக்குத்தூள்.

நேயர்காள்!

கபால நோய்களனைத்திற்கும் கைகண்ட ஔஷதம் யாவரும் எளிதில் உபயோகித்து சுகமடையத் தக்கவிதத்தில் சித்தர்களிலெல்லாம் சிரேஷ்டராகிய லுக்மானுல் ஹக்கீம் அவர்கள் கனிந்தருளிய நூல்களை ஆராய்ந்து தெளிந்து அனுபோகத்தில் நிகரற்றதெனக் கண்டறிந்த கபால சஞ்சீவியாகிய அருமை வாய்ந்த எமது அங்கோரா சுகந்த மூக்குத்தூளை ஒரு தடவை உபயோகித்துப் பார்ப்பீர்களேல் உண்மை விளங்குமென்பதில் ஆக்ஷேபமில்லை.

இதை ஒவ்வொருவரும் வாங்கி எவ்வேளையும் நாசியிற் பூரகஞ்செய்தவரின் கபாலச்சூட்டினால் ஏற்படும் மூளை வரட்சி, மயக்கம், அறிவுமந்தம், நீரேற்றம், தலைக்கனம். கபாலக்குத்து, கண்மங்கல், கண்ணில் நீர்வடிதல், கண் அழுந்தல், கண் சிகப்பு, கண்ணில் பீளை சாடுதல், கண் புகைச்சல், நாசியில் நீர்வடிதல், பீனிசம், மூக்கடைப்பு, துற்கந்தம், காதுமந்தம், காதிரைச்சல், காதடைப்பு, காதில் சீழ்வடிதல், காதுக் குத்து, பல்வலி, பல்லரணை, பல்லில் சீழ் வடிதல், பல்க்குடைச்சல், வாய்நாற்றம் முதலிய கபால நோய்கள் யாவும் சூரியனைக்கண்ட பனிபோல் எழிதில் நீங்கி நற்சுகந்தரும்.

| | | | |
|---|---|---|---|
| அரைக்கால் ருத்தல் டின் 1-க்கு கிரயம் | | ... ரூ. | 0—4—0 |
| கால் ருத்தல் | ஷை | ... ,, | 0—7—0 |
| அரை ருத்தல் | ஷை | ... ,, | 0–13—0 |
| ஒரு ருத்தல் | ஷை | ... ,, | 1—9—0 |
| வாழைத்தடையில் வைத்தது தடை 100-க்கு கிரயம் | | ரூ | 1—2—0 |
| ஷை தடை | 1-க்கு | ,, ,, | 0—0—3 |

# நூருனிய்யா அற்புத சஞ்சீவி மாத்திரை.

வாய்வு, வயிற்றுவலி, ஏப்பு, இளைப்பு, புகச்சல் இவைகளை நீக்குவதுடன் இராகம் பாடுகிறவர்களின் தொண்டைக் கம்மலை நீக்கி இனிமையான தொனியைத் தரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 25 மாத்திரையுள்ள டப்பி 1-க்கு கிரயம் | | | ... ரூ. | 0—3—0 |
| 50 | ,, | ,, | ,, ... ரூ | 0—5—0 |
| 100 | ,, | ,, | ,, ... ரூ. | 0—9—0 |

# பரிபூரண நூருனிய்யா தைலம்.

சகோதரர்காள்!

பற்பலர்கள் பரீட்சித்தறிந்து உபயோகித்து வருகின்ற இத்தைலமானது அநேகவகை மூலிகைகளாலும் கடைமருந்து சரக்குகளாலும் புஷ்பங்களாலும் வித்துக்களாலும் இன்னும் குங்குமப்பூ கோரோசனை, அம்பர், கஸ்தூரி, புனுகு, சவாது முதலிய மேலான சரக்குகளைக்கொண்டு தயாரித்தது.

இத்தைல ஸ்நானத்தால் மேகப்பத்து, ஊரல், தாதுஉடைவு, முதலிய மேக சம்பந்தமான சகல வியாதிகளும், மூல வியாதிகள் முழுவதும் வாய்வு, வயிற்றுவலி, திரேக எரிவு, சொரிசிரங்கு, நமைச்சல், சோம்பல் முதலிய அநேக வியாதிகளையும் அற்புதமாய் குணமாக்கியும் கண் மங்கல், கண்ணில் பீழைசாடுதல், கண்புகைச்சல், கண்ணில் நீர்வடிதல், கண் சிகப்பு, கண் அழுத்தல், மயக்கம், தலைக்கனம், தலைக்குத்து, நீரேற்றம், அறிவு மந்தம், நாசியில் ஏற்படும் சகல வியாதிகளும் காதில் ஏற்படும் வியாதிகள் யாவும் மூளை வரட்சி முதலிய கண்டத்திற்கு மேற்பட்ட கபாலவியாதிகள் தொண்ணூற்றாறும் நீங்கி திரேகத்திற்கு ஆரோக்கியத்தையும் நற்சுகத்தையும் தருவதில் நிகரற்றதென உபயோகித்தவர்கள் கண்டறிந்த உண்மையாதலின் இதன் குணவிபரத்தைப் பற்றி விசேஷித்து எழுதவில்லை.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 24. | அவுன்ஸ் பாட்டல் 1-க்கு | கிரயம் | ரூ | | | ... | 2—4—0 |
| 12 | ,, | ,, | ,, | ,, | | ... | 1—4—0 |
| 1 | சாம்பிள் | ,, | ,, | ,, | ,, | ... | 0—2—0 |

# நூருனிய்யா ஜீவாமிர்த லேகியம்.

மலசிக்கலினால் ஏற்படும் சர்வ வியாதிகளையும் நிவர்த்தித்து நற்சுகந்தரும்.

டப்பா 1-க்கு கிரயம் ... ரூ. 0—10—0

புரோப்ரைட்டர்,

வ. கா. வ முஹம்மது ராவுத்தர்.

மேலத்தெரு, பேட்டை.

---

ஏஜண்ட்:— **V. M. S.** முஹம்மது ராவுத்தர்,

தைலம், லேகியம், மாத்திரை, மூக்குத்தூள் & ஷாப் வர்த்தகம்,

பிராஞ்ச:—வடசேரி. வடக்குரதவீதி, திருநெல்வேலி.

## குறிப்பு.

## இந்நூல் கிடைக்குமிடம்.

1. கனம் வ. கா. முஹம்மது ஆலீம் சாயபு அவர்கள்,
திருநெல்வேலிப் பேட்டை, மேலத்தெரு.

2. கனம் கா. செ. ஆதம் காஸீம் இராவுத்தர் அவர்கள்,
கையூமி பிரஸ், திருநெல்வேலிப் பேட்டை.

3. கனம் மதியமிர்த சஞ்சீவி மெடிக்கல் ஹால்,
திருநெல்வேலிப் பேட்டை,

4. கனம் ரஹ்மானியா ஸ்டோர், சேர்மாதேவி பாட்டை,
திருநெல்வேலிப் பேட்டை.

5. கனம் ப. த. சி. வா. திவான்முஹ்யித்தீன் இராவுத்தாவர்கள்
ஷாப் வர்த்தகம் மேலரதவீதி, திருநெல்வேலி.

6. கனம்ம. முஹம்மது அப்துற்-றஹ்மான் இராவுத்தாவர்கள்
ஷாப் வர்த்தகம் மேலரதவீதி, திருநெல்வேலி.

7. கனம் செ. ம முகம்மதுஸா இராவுத்தர் அவர்கள்
டிரங்குப்பெட்டி வர்த்தகம், மேலரதவீதி, திருநெல்வேலி.

8. கனம் கா. நா. பிச்சை முஹ்யித்தீன் இராவுத்தாவர்கள்,
ஷாப் வர்த்தகம், மேலரதவீதி, திருநெல்வேலி.

9. கனம் மீ. ரு. முஹம்மதிஸ்மாயில் இராவுத்தாவர்கள்,
நெல் மண்டி, கூழக்கடை பஜார், திருநெல்வேலி.